بسم الله الرحمن الرحيم    نحمده ونصلي على رسوله الكريم    وعلى عبده المسيح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 5

இதழ் 22

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

04 ஷவ்வால் 1441 ஹிஜ்ரி கமரி 28 ஹிஜ்ரத் 1399 ஹிஜ்ரி ஷம்ஸி
28 மே 2020

## அல்லாஹ்வின் கட்டளை

وَ اٰتُوا الْيَتٰمٰٓى اَمْوَالَهُمْ وَلَا تَتَبَدَّلُوا الْخَبِيْثَ بِالطَّيِّبِ ۖ وَلَا تَاْكُلُوْٓا اَمْوَالَهُمْ اِلٰٓى اَمْوَالِكُمْ ۭ اِنَّهٗ كَانَ حُوْبًا كَبِيْرًا ③

அநாதைகளுக்கு அவர்களின் பொருள்களைக் கொடுத்து விடுங்கள். தூய்மையானதற்கு ஈடாக, தூய்மையற்றதை மாற்றாதீர்கள். மேலும் அவர்களின் பொருள்களை உங்கள் பொருள்களுடன் (சேர்த்து) விழுங்கி விடாதீர்கள். நிச்சயமாக இது பெருங்குற்றமாகும். (4:3)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் உடல்நிலை குறிப்பு

15 மே 2020 வெள்ளிக்கிழமை அன்று ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் ஜுமுஆ குத்பா வழங்கவில்லை. அன்னார் அந்த சந்தர்ப்பத்தில் ஜமாஅத் உறுப்பினர்களுக்கு ஒரு தூதுச் செய்தியை வழங்கினார்கள். அதனை அன்னாரின் தனிச்செயலர் மதிப்பிற்குரிய முனீர் அஹ்மது ஜாவீது சாஹிப் அவர்கள் முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யாவின் வாயிலாக ஜமாஅத் உறுப்பினர்களுக்கு எடுத்துக் கூறினார்கள்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்: இன்று என்னால் ஜுமுஆ நடத்த முடியாது என்பது எனக்கு வருத்தமாக உள்ளது. ஏனென்றால் சில நாட்களுக்கு முன் வீட்டின் முற்றத்தில் நடந்து சென்றபோது மிதியடியில் (Mat) கால் இடறியதன் காரணமாக தடுமாறிவிட்டன. இதன் காரணமாக உறுதியான பகுதியில் விழுந்ததால் நெற்றி மற்றும் மூக்கில் பரவலான காயம் ஏற்பட்டது. எனவே ஜுமுஆ நடத்துவது கடினமாகும். ஓய்வு எடுக்க வேண்டும் என்பதே மருத்துவர்களின் ஆலோசனையுமாகும். துஆ செய்யுங்கள். அடுத்த ஜுமுஆவில் கலந்து கொள்ளும் வகையில் அல்லாஹ் முழுமையான விரைவான பூரண குணத்தை வழங்குவானாக. இன்ஷா அல்லாஹ்.

மேலும் தற்போது ரமலானின் இறுதி பத்து நடக்கின்றது. இதில் ஜமாஅத்திற்காகவும் அதிகமாக துஆ செய்யுங்கள். அல்லாஹ் ஜமாஅத்தை அனைத்து தீங்குகளிலிருந்தும் காப்பாற்றி தனது பாதுகாப்பில் வைப்பானாக. பாகிஸ்தானில் இன்றைய நாட்களில் அரசியல்வாதிகளும் மீடியாக்களும் ஜமாஅத்தை எதிர்ப்பதில் மிகத் தீவிரமாக உள்ளன. அல்லாஹ் மற்றும் அவனது தூதர் ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பெயரால் அரசியல் செய்கின்றனர். அஹ்மதிகளை மிகத் தீவிரமாக இதன் அடிப்படையில் இலக்காக்க முயற்சி செய்கின்றனர்.

அல்லாஹ் அஹ்மதிகளையும் முழு சமுதாயத்தையும் அவர்களின் இந்த விளையாட்டின் தீய தாக்கங்களிலிருந்து பாதுகாப்பாக வைப்பானாக. எவ்வாறிருப்பினும் அவர்களின் ஒவ்வொரு தாக்குதலுக்கு பதிலடியாக நமது வேலை துஆ செய்வதும், அல்லாஹ்விற்கு முன்னால் குனிவதும் ஆகும். ரமலானின் இந்த இறுதி பத்தில் முன்பைவிட அதிகமாக அல்லாஹ்வின் முன்னால் குனியுங்கள். பணிவுடன் துஆக்கள் செய்யுங்கள். அல்லாஹ்விடனம் அவனது கருணையையும் அருளையும் வேண்டுங்கள். அல்லாஹ் அனைத்து அஹ்மதிகளுக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன்.

இதன் பிறகு மதிப்பிற்குரிய டாக்டர் ஷபீர் பட்டி சாஹிப் அவர்கள் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் மருத்துவ அறிக்கையை ஜமாஅத் மக்களுக்கு தெரிவித்தார்கள்.

டாக்டர் சாஹிப் கூறுகின்றார்கள்: ஹுஸூர் அவர்கள் விழுந்ததால் நெற்றி மற்றும் முழங்காலில் காயம் ஏற்பட்டுள்ளது. இறைவனின் குறிப்பான அருளால் இவை அனைத்தும் லேசானவையாக இருந்தன. நெற்றி மற்றும் பிற உறுப்புகளில் எந்த ஆழமான காயமும் ஏற்படவில்லை. சிறிது வீக்கம் இன்னும் உள்ளது. ஆனால் அது சிறிது சிறிதாக குறைந்து வருகின்றது. இன்ஷா அல்லாஹ் முழுமையாக குணமாகிவிடும். ஹுஸூர் அவர்கள் எவ்வித சிரமமின்றி நடக்கின்றார்கள். பொதுவாக நிலை மிக நன்றாக உள்ளது. அல்ஹம்துலில்லாஹ்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களிடம் சில நாட்கள் ஓய்வு எடுங்கள். ஜுமுஆவும் கூட நடத்த வேண்டாம் என பணிவான விண்ணப்பம் செய்யப்பட்டது. அதனை ஹுஸூர் அவர்கள் மிகுந்த பரிவுடன் அதனை ஏற்றுக் கொண்டார்கள். ஜஸாகுமுல்லாஹ்.

**ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் உடல்நிலை பற்றிய மதிப்பிற்குரிய டாக்டர் ஷபீர் பட்டி சாஹிப் அவர்களின் புதிய அறிக்கை (17 மே 2020 ஞாயிற்றுக்கிழமை)**

அல்லாஹ்வின் அருளால் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் பொதுவான உடல்நிலை இன்று மிகவும் நன்றாக இருந்தது. காயங்களின் வலியும் குறைந்துள்ளது. நெற்றி, மூக்கு மற்றும் முழங்காலில் காயங்கள் மிகவும் திருப்தியளிக்கும் விதமாக குணமடைந்து வருகிறது. அல்ஹம்துலில்லாஹ்.

ஹுஸூர் அவர்கள் கடிதங்களை பார்வையிடுகின்றார்கள். மேலும் அனைத்து ஜமாஅத் உறுப்பினர்களுக்காகவும் துஆவும் செய்கின்றார்கள். நீங்களும் அன்பிற்குரிய எஜமானருக்காக மனவேதனையுடன் துஆக்களை தொடர்ந்து செய்து வாருங்கள். அல்லாஹ் குறிப்பான தனது அருளால் ஹுஸூர் அவர்களுக்கு விரைவாக முழுமையான குணத்தை வழங்குவானாக. அதன் மூலம் ஜமாஅத், அடுத்த ஜுமுஆவில் தமது அன்பிற்குரிய இமாமை காணும் நற்பாக்கியத்தை பெறட்டுமாக.

ஜமாஅத் உறுப்பினர்கள் அன்பிற்குரிய எஜமானர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் முழுமையாக குணமடைய குறிப்பாக துஆக்கள் செய்து வாருங்கள்.

اَللّٰهُمَّ رَبَّ النَّاسِ اَذْهِبِ الْبَأْسَ اِشْفِ اَنْتَ الشَّافِيْ لَا شِفَاءَ اِلَّا شِفَاءُكَ شِفَاءً لَّا يُغَادِرُ سَقَمًا

இறைவா! மக்களை இரட்சிப்பவனே! துன்பத்தைப் போக்கிய இவருக்கு குணமளித்திடுவாயாக! நீயே குணமளிப்பவன். உன் நிவாரணத்தைத் தவிர வேறு நிவாரணமில்லை. நோய் அறவே இல்லாதவாறு குணமளிப்பாயாக.

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அல்லாஹ்வின் மீது உண்மையான நம்பிக்கையைப் பெற்றுக் கொள்வது எனது ஜமாஅத்தின் மீதான முதல் கடமையாகும்**

**அசல் ஈமான் என்பது என்னவென்றால் மேலும் தக்வாவின் தேட்டம் என்பது என்னவென்றால், நீங்கள் அல்லாஹ்விடம் செய்துள்ள உடன்படிக்கைகளை முழுமை செய்யுங்கள். மேலும் ஆழமாக சென்று அதன்படி செயலாற்றுங்கள். இதேபோன்று அவனது அமானிதங்களுக்குரிய உரிமைகளை வழங்குங்கள். மேலும் ஆழமாக சென்று அதனை செயல்படுத்துங்கள்**

**இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள். ஏனென்றால் இறையச்சத்திற்கு பிறகு தான் இறைவனின் அருட்கள் கிடைக்கின்றன**

**நல்ல மனிதராகவும், தூய இயல்பு படைத்தவராகவும், மக்களுக்கு நன்மை பயப்பவராகவும், தனது உணர்ச்சிகளை கட்டுப்படுத்திக் கொள்ளக் கூடியவராகவும், பணிவை மேற்கொள்ளக் கூடியவராகவும் ஒருவர் இருந்தால் அதன் மூலம் அற்புதங்களைப் போன்று மக்கள் அவரின் தாக்கத்திற்கு ஆளாகி விடுவார்கள். தப்லீக் செய்வதற்கு இதுவும் ஒரு வழிமுறையாகும்**

**திருக்குர்ஆனின் தெளிவான வழிகாட்டல் என்னவென்றால், நோயாளியாக இருந்தால் நோன்பு நோற்கக் கூடாது. நோயாளியாக ஆகி விடுவோம் என்ற சாத்தியக்கூறின் அடிப்படையில் நோன்பை விடுவது தவறாகும்**

**நீங்கள் உங்களது நிலைமைகளைப் பார்த்து சுயமே முடிவெடுத்துக் கொள்ளுங்கள். தூய உள்ளம் படைத்தவராகவும், இறையச்சத்தின் வழிகளில் நின்று கொண்டும் உங்களது உள்ளத்திடமே நீங்கள் மார்க்கத் தீர்ப்பு கேளுங்கள்**

**நோன்பு வைப்பதற்கு நற்பாக்கியம் கிடைப்பதற்கும், தொற்று நோயிலிருந்து இரட்சிப்பைப் பெறுவதற்கும் துஆக்கள் செய்வதன் பக்கம் ஹுஸூர் அவர்கள் கவனமூட்டினார்கள்**

**அல்லாஹ் நமக்கு துஆக்கள் செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. மேலும் நமது நிலைமைகளை சிறந்ததாக்கிக் கொள்வதற்கான நற்பாக்கியத்தையும் வழங்குவானாக. மேலும் உலகிற்கும் உலக வல்லரசு அரசாங்கங்களுக்கும் அறிவுடன் தனது கொள்கைகளை வகுக்கவும், எதிர்கால செயல் திட்டங்களை உருவாக்கவும் அல்லாஹ் நற்பாக்கியத்தை வழங்குவானாக**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 24 ஏப்ரல் 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **ஷஹாதத்** மாதம் **24 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ۔

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُتِبَ عَلَيْكُمُ الصِّيَامُ

كَمَا كُتِبَ عَلَى الَّذِيْنَ مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُوْنَ ۙ﴿۱۸۴﴾

اَيَّامًا مَّعْدُوْدٰتٍ ؕ فَمَنْ كَانَ مِنْكُمْ

مَّرِيْضًا اَوْ عَلٰى سَفَرٍ فَعِدَّةٌ مِّنْ اَيَّامٍ اُخَرَ ؕ وَعَلَى الَّذِيْنَ

يُطِيْقُوْنَهٗ فِدْيَةٌ طَعَامُ مِسْكِيْنٍ ؕ فَمَنْ تَطَوَّعَ خَيْرًا فَهُوَ

خَيْرٌ لَّهٗ ؕ وَاَنْ تَصُوْمُوْا خَيْرٌ لَّكُمْ اِنْ كُنْتُمْ تَعْلَمُوْنَ ﴿۱۸۵﴾

شَهْرُ رَمَضَانَ الَّذِيْۤ اُنْزِلَ فِيْهِ الْقُرْاٰنُ

هُدًى لِّلنَّاسِ وَبَيِّنٰتٍ مِّنَ الْهُدٰى وَالْفُرْقَانِ ۚ

فَمَنْ شَهِدَ مِنْكُمُ الشَّهْرَ فَلْيَصُمْهُ ؕ وَمَنْ كَانَ مَرِيْضًا اَوْ عَلٰى سَفَرٍ

فَعِدَّةٌ مِّنْ اَيَّامٍ اُخَرَ ؕ يُرِيْدُ اللّٰهُ بِكُمُ الْيُسْرَ

وَلَا يُرِيْدُ بِكُمُ الْعُسْرَ ۫ وَلِتُكْمِلُوا الْعِدَّةَ وَلِتُكَبِّرُوا اللّٰهَ عَلٰى مَا

هَدٰىكُمْ وَلَعَلَّكُمْ تَشْكُرُوْنَ ﴿۱۸۶﴾

நம்பிக்கை கொண்டவர்களே! உங்கள் முன்னோருக்கு நோன்பு கடமையாக்கப்பட்டதைப் போன்று உங்களுக்கும் அது கடமையாக்கப்பட்டுள்ளது. இதனால் நீங்கள் ஆன்மீக மற்றும் ஒழுக்க ரீதியிலான பலவீனங்களிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும்.

அடுத்த வசனத்தின் பொருள்: எனவே கணிக்கப்பட்ட நாட்களில் (நோன்பு நோற்றுக் கொள்க). உங்களில் நோயாளியாகவோ, பயணியாகவோ இருப்பவர் (விடுபட்ட நோன்பை) மற்ற நாள்களில் நோற்க வேண்டும். இதற்குரிய ஆற்றலைப் பெறாதவர்கள் பரிகாரமாக ஓர் ஏழைக்கு உணவளிப்பது கடமையாகும். ஒருவர் முழுமையாக கட்டுப்பட்டு ஒரு நற்செயல் செய்வார் எனில் அது அவருக்கு நன்றே. நீங்கள் அறிவுடையவர் என்றால் நோன்பு நோற்பது உங்களுக்கு சிறந்தது. ரமலான் மாதம் திருக்குர்ஆன் அருளப்பட்ட மாதமாகும். திருக்குர்ஆன் எல்லா மக்களுக்கும் நேர்வழி காட்டக் கூடியதும், நேர்வழியை தெளிவாக்கக் கூடியதும் (நன்மையை, தீமையை) பிரித்தறியக் கூடியதும் ஆகும்.

எனவே உங்களுள் அம்மாதத்தைக் காண்பவர் அதில் நோன்பு நோற்க வேண்டும். ஆனால் நோயாளியாகவோ, பயணியாகவோ இருப்பவர் (விட்டுப்போன நோன்பை) மற்ற நாட்களில் கணக்கிட்டு (நோற்கவும்). அல்லாஹ் உங்களுக்கு எளிதை விரும்புகின்றான். உங்களுக்கு கடினத்தை விரும்புவதில்லை. நீங்கள் எண்ணிக்கையை பூர்த்தி செய்வதற்காகவும், அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக நீங்கள் அவனை பெருமைப்படுத்துவதற்காகவும், நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்துவதற்காகவுமே இந்த கட்டளையை அவன் பிறப்பித்துள்ளான். (2:184–186)

அல்லாஹ்வின் அருளால் நாளையிலிருந்து இங்கு ரமலான் ஆரம்பமாகின்றது. நமது ஆன்மீக முன்னேற்றத்திற்காக அல்லாஹ் ரமலானின் நோன்புகளை வைத்துள்ளான். நான் ஓதிய திருக்குர்ஆனின் முதல் வசனத்திலும் கூட அல்லாஹ் இதனையே

குறிப்பிட்டுள்ளான். நீங்கள் இறையச்சமுடையவர்களாக ஆக வேண்டும் என்பதற்காக உங்கள் மீது நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது என்று அல்லாஹ் கூறுகின்றான்.

தக்வா என்றால் என்ன? இதற்கு விளக்கமளித்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

தக்வா என்பது என்னவென்றால், மனிதன் இறைவனுடைய அனைத்து அமானிதங்களையும், ஈமானிய உடன்படிக்கைகளையும் அதே போன்று படைப்பினங்களின் அனைத்து அமானிதங்களையும், உடன்படிக்கைகளையும் இயன்ற வரை பேணி நடக்க வேண்டும். அதாவது அதிலுள்ள நுட்பத்திலும் நுட்பமான அம்சங்களின் மீது வலிமைக்கேற்ப பேணி நடக்க வேண்டும்.

(ஸமீமா பராஹீனே அஹ்மதிய்யா தொகுதி 5, ரூஹானீ கஸாயின் தொகுதி 21 பக்கம் 210)

அதாவது அமானிதங்கள் மற்றும் உடன்படிக்கைகளின் நுட்பத்திலும் நுட்பமான அம்சங்களை கருத்தில் கொண்டு நடக்க வேண்டும். பின்னர் அதை செயல்படுத்தக் கூடியவராகவும், அதனைப் பேணுபவராகவும் இருக்க வேண்டும்.

ஆக இது ஒன்றும் எளிதான பணியல்ல. அல்லாஹ்விற்குரிய உரிமைகள் என்ன? அடியார்களுக்குரிய உரிமைகள் என்ன? என்பதன் பட்டியலை உருவாக்கத் தொடங்கினால் மனிதன் சங்கடத்திற்கு ஆளாகி விடுவான். அல்லாஹ்விற்குரிய இறைவணக்கத்தின் உரிமையை நம்மால் வழங்க முடியாது. அல்லாஹ் நம்மீது செய்துள்ள அனைத்து கருணைகளுக்கும் உரிய கடமை என்னவென்றால், நாம் அவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். இந்த நன்றி செலுத்துதலுக்குரிய உரிமைகளை நாம் செலுத்துவதும் இல்லை; செலுத்தவும் முடியாது.

அவ்வாறு நன்றி செலுத்தாமலேயே அல்லாஹ்வின் அருட்கொடைகளிலிருந்து பயன் பெற்றுக் கொண்டே செல்கின்றனர். மேலும் அந்த அருட்கொடைகளை தனக்கான உரிமையாக கருதுகின்றார்கள். ஆனால் உண்மை என்னவென்றால், நமது இந்த நிலை மற்றும் நாம் நன்றிகேடு காட்டுகின்றபோதிலும் அல்லாஹ் இந்த கருணைகளை நம்மீது செய்து கொண்டே செல்கின்றான். அல்லாஹ்வுடன் நாம் செய்த உடன்படிக்கைகளை நாம் முழுமை செய்வது கிடையாது.

படைப்பினங்களுக்குரிய உரிமைகள் உள்ளன. பெற்றோர்களுக்குரிய உரிமைகள் உள்ளன. அண்டை அயலாருக்குரிய உரிமைகள் உள்ளன. பயணிகளுக்கான உரிமைகள் உள்ளன. சமூகத்தின் பொதுவான உரிமைகள் உள்ளன. அதனையெல்லாம் வழங்குவதற்கு நமக்கு கட்டளையும் உள்ளது. ஆனால் நாம் அந்த உரிமைகளை வழங்குவதில்லை.

எனவே நாம் அல்லாஹ்விற்குரிய உரிமைகளையும் வழங்குவதில்லை. நாம் நுட்பமான முறையில் ஆய்வு செய்தால் அடியார்களுக்குரிய உரிமைகளையும் வழங்குவதில்லை. நான் பொதுவாக சிறிய சிறிய உரிமைகளை உள்ளடக்கிய பட்டியல் ஒன்றை தயாரித்துள்ளேன். அதில் அல்லாஹ்விற்குரிய உரிமைகளும் உள்ளன. மற்றும் அல்லாஹ்வின் படைப்பினங்களுக்குரிய உரிமைகளும் உள்ளன. அந்த பட்டியல் கூட 28,29 உரிமைகளை உள்ளடக்கியதாக ஆகிவிட்டது.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அசல் ஈமான் என்பது என்னவென்றால் மேலும் தக்வாவின் தேட்டம் என்பது என்னவென்றால், நீங்கள் அல்லாஹ்விடம் செய்துள்ள உடன்படிக்கைகளை முழுமை செய்யுங்கள். மேலும் ஆழமாக சென்று அதன்படி செயலாற்றுங்கள். இதேபோன்று அவனது அமானிதங்கக்குரிய உரிமைகளை வழங்குங்கள். மேலும் ஆழமாக சென்று அதனை செயல்படுத்துங்கள். அதேபோன்று படைப்பினங்களுடனான உடன்படிக்கைகளையும் நுட்பமான முறையில் நிறைவேற்றுங்கள். மேலும் அதன் அமானிதங்களையும் ஒரு கவலையுடன் செயல்படுத்துங்கள். அவ்வாறு செய்தால்தான் இறையச்சம் உள்ளது என்று பொருளாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்: இந்த ரமலான் மாதம் ஏன் வந்துள்ளது என்றால் மேலும் நோன்பு நோற்பதன் பக்கம் சிறப்பாக ஏன் கவனமூட்டப்பட்டுள்ளது என்றால் வருடத்தின் 11 மாதங்களில் இந்த உரிமைகளை வழங்குவதில் ஏற்பட்ட கவனக் குறைவுகளையும், குறைகளையும் இந்த மாதத்தில் அல்லாஹ்வின் பக்கம் முழுமையான கவனத்தை செலுத்தியவாறு அல்லாஹ்விற்குரிய ஆகுமானவற்றை விலக்கிக் கொண்டவாறும், அல்லாஹ்விற்காக பசியையும் தாகத்தையும் சகித்துக் கொண்டும், அல்லாஹ்வை வணங்குகின்ற விவகாரத்தில் முன்பை விட அதிமகாக கவனம் செலுத்தியவாறும், அடியார்களுக்குரிய உரிமைகளை வழங்குவதில் சிறப்பான கவனத்தை செலுத்தியவாறும் அந்த குறைகளை அகற்ற முயற்சி செய்ய வேண்டும். இதை நீங்கள் செய்யும்போதுதான் அதன் பெயர் தக்வா ஆகும்.

மேலும் இதுவே ரமலான் மற்றும் நோன்பின் நோக்கமும் ஆகும். மனிதன் இந்த நிய்யத்துடனும், இந்த நோக்கத்தை அடைவதற்காகவும் நோன்பு நோற்றால் மேலும் ரமலானை நல்ல எண்ணத்துடன் கடந்தால் அந்நிலையில் அந்த மாற்றம் தற்காலிக மாற்றமாக இருக்காது. மாறாக, ஒரு நிரந்தர மாற்றமாக அது இருக்கும்.

பின்னர் அல்லாஹ்வினுடைய உரிமைகளை செலுத்துவதன் பக்கம் நிரந்தரமான கவனம் இருக்கும். இறைவணக்கத்தின் உரிமைகளை வழங்குவதன் பக்கமும் நிரந்தரமான கவனம் இருந்து வரும். உலகத்தின் மும்முரமான பணிகளும் வீணான காரியங்களும் மேலோங்க முடியாது. மனிதர்களுக்குரிய உரிமைகளை வழங்குவதன் பக்கமும் பொதுவாக கவனம் நிலைபெற்றிருக்கும். தனது சுயநலனுக்காக மக்களின் உரிமைகளை பறிப்பவர்களாக நாம் இருக்க மாட்டோம். நாம் இந்த நிய்யத்துடனும், இந்த எண்ணத்துடனும் நோன்பின் மாதங்களில் நுழையவில்லை என்றால் பின்னர் நோன்பின் மாதத்தில் நாம் நுழைவது பயனற்றதாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

எந்த நபர் அல்லாஹ்வின் வழியில் அவனது அருளை வேண்டியவாறு நோன்பு நோற்கின்றாரோ அல்லாஹ் அவரது முகத்திற்கும் நெருப்பிற்கும் இடையில் 70 ஆண்டுளுக்கான தூரத்தை ஏற்படுத்தி விடுகின்றான்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஜிஹாத்... ஹதீஸ் எண் 2840)

## திருக்குர்ஆனிலிருந்து...

தீய செயல்களைச் செய்து விட்டுப் பின்னர் (அவற்றிலிருந்து விலகிக்) கழிவிரக்கம் கொண்டு மேலும் நம்பிக்கை கொள்வார்களாயின் நிச்சயமாக உம் இறைவன் இதன் பின்னரும் மிக்க மன்னிப்பவனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான். (7:154)

Faizal Hameed Ilahi, Tittacherry

ஆக இதுதான் நோன்பின் பரக்கத்துகள் ஆகும். அதாவது நோன்பு ஏற்படுத்துகின்ற இறையச்சம் இதுவே ஆகும். நோன்பு என்பது வெறும் 30 நாட்களுக்கு தக்வாவை ஏற்படுத்துவதில்லை. மாறாக, உண்மையான நோன்பு 70 ஆண்டுகள் வரை தனது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இந்த கணக்கின் அடிப்படையில் நாம் பார்த்தால், நோன்பு கடமையாகி விட்ட பிறகு அதாவது பருவமடைந்த ஒரு முஸ்லிமின் மீது நோன்பு கடமையாகி விடுகிறது.

அதன் பிறகு எந்த நபர் உண்மையான பயனைப் பெறுவாரோ மேலும் நோன்பின் ஆன்மாவை புரிந்தவராக நோன்பை நோற்பவராக இருப்பாரோ அவர் முழு ஆயுட்காலத்திற்கும் இந்த பரக்கத்திலிருந்து பயன் பெறக்கூடியவராக இருப்பார். அல்லாஹ் நோன்பில் வைத்த நன்மைகளிலிருந்து பயன் பெறுவார். மேலும் அவர் இறையச்சத்தின் வழிகளை தேடிக் கொண்டிருப்பார். அதுவே நோன்பின் நோக்கமும் ஆகும். மேலும் இவ்வாறு அல்லாஹ்வின் கோபத்திலிருந்து அவர் தப்பித்துக் கொள்வார். மேலும் அல்லாஹ்வின் திருப்தியை பெறக்கூடியவராக அவர் ஆகிக் கொண்டே செல்வார்.

நான் சிறிது கற்பனை செய்து பார்த்தேன். நமது சமூகத்தில் இதுபோன்ற நோன்பாளிகள் தோன்றி விட்டால் பின்னர் அது எவ்வளவு அழகிய சமூகமாக இருக்கும். அது போன்ற சமூகத்தில் அல்லாஹ்வின் உரிமைகளும் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கும். மேலும் அடியார்களுக்குரிய உரிமைகளும் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கும். இந்த அழகிய சமூகத்தையே ஒவ்வொரு நம்பிக்கையாளரும் உருவாக்க ஆசைப்படுகின்றார். இன்னும் சொல்வதென்றால், ஒவ்வொரு மனிதனும் அதற்காக ஆசைப்படுகின்றார்.

நான் ஏற்கனவே கூறியதுபோன்று உரிமைகளைப் பற்றிய கேள்வி எழுகின்றது. பொதுவாக மனிதன் தனக்கான உரிமைகளை பெற்றுக் கொள்ள விரும்புகின்றான். பிறருக்கான உரிமைகள் கவனத்தில் கொள்வதில்லை. ஆனால் இஸ்லாம் கூறுவது என்னவென்றால், நீங்கள் பிறருக்காகவும் இந்த சமூகத்தை நிலைநாட்ட வேண்டும். நீங்கள் வெறும் உங்களது வசதி வாய்ப்புகளையும், உங்களது சுயநலன்களையும், உங்களது உரிமைகளை மட்டுமே பார்க்கக் கூடாது. மாறாக, பிறரின் உரிமைகளையும் பார்க்க வேண்டும். அதனையும் கருத்தில் கொண்டு நடக்க வேண்டும்.

இன்றைய நாட்களில் பரவி வரும் இந்த தொற்றுநோய் வைரஸானது அரசாங்கத்தின் சட்டத்தின் கீழ் பெரும்பாலான மக்களை வீடுகளில் அடைத்துள்ளது. இதனால் ஒரு நல்ல விஷயம் இந்த வகையில் ஜமாஅத்திலும் கூட உருவாகி வருகின்றது. சில இடங்களில் மக்களுக்கும் இதைப் பற்றிய எண்ணம் உருவாகி உள்ளது. ஆனால் ஜமாஅத்தில் சிறப்பான முறையில் இதன் பக்கம் கவனம் உள்ளது. உலகத்தின் ஒவ்வொரு நாட்டிலும் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் கீழ் தன்னார்வ தொண்டர்களின் மூலம் எங்கெல்லாம் உதவிக்கான அவசியம் உள்ளதோ மேலும் மக்களுக்கு அத்தியாவசியத் தேவையின் பொருட்கள் எங்கெல்லாம் தேவையுள்ளதோ அதை சென்றடையச் செய்வதற்காகவும், ஏனைய வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவும், மருந்துகள் கிடைப்பதற்காகவும் அவர்கள் முயற்சி செய்கின்றனர்.

இவ்வாறு நாம் வழங்கி வருகின்ற இந்த உரிமையானது ஒரு முன்னுதாரணத்தை வெளிப்படுத்தி வருகின்றது. மேலும் இதிலிருந்து நம்மவர்களும் பயன்பெற்று வருகின்றனர். அந்நியர்களும் பயனடைந்து தாக்கத்திற்கு ஆளாகி வருகின்றனர். எனவே மனித இனத்திற்கு தொண்டாற்றுவதற்கு இன்று உருவாகியுள்ள இந்த எண்ணம் எப்பொழுதும் நம்முள் நிலைபெற்றிருக்க வேண்டும். அசாதாரண சூழலில் மட்டுமே உருவாகக் கூடியதாக இருக்கக்கூடாது.

எவ்வாறிருப்பினும், இதுமட்டுமல்லாமல் இதனால் என்ன ஆன்மீக நன்மைகள் உள்ளன? என்ற கேள்வி எழுகின்றது. மக்கள் எனக்கு எழுதுகின்றார்கள். தற்போதுள்ள இந்த சூழலின் காரணமாக எங்கள் குடும்பங்களில் புதிய சூழல்கள் உருவாகி இருக்கின்றன. நாங்கள் வீடுகளில் அமர்ந்திருக்கின்றோம். தொழுகைகளை ஜமாஅத்தாக நிறைவேற்றி வருகின்றோம். மேலும் தொழுகைகளுக்குப் பிறகு சுருக்கமான தர்ஸும் நடைபெறுகின்றது. நாங்கள் ஒன்றாக அமர்ந்து குத்பாவை கேட்கின்றோம். மேலும் MTA வில் வேறு சில நிகழ்ச்சிகளையும் நாங்கள் பார்த்து வருகின்றோம் என்று மக்கள் கூறுகின்றனர்.

ஒருவேளை இந்த ஊரடங்கு உத்தரவு நீட்டிக்கப்பட்டால், ரமலான் முழுவதும் நிலைபெற்றிருந்தால் இதேபோன்று ஜமாஅத்தாக தொழுவதற்கும், தர்ஸ் கொடுப்பதற்கும் மேலதிகமான கவனத்தை செலுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும். பிள்ளைகளுக்கு சின்னச் சின்ன மார்க்க விஷயங்களை கற்றுக் கொடுக்க வேண்டும்.

நான் இதற்கு முன்பு ஒரு குத்பாவில் கூறியதுபோன்று இந்த சூழலின் மூலம் நீங்கள் உங்களது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். மேலும் பிள்ளைகளின் அறிவையும் வளர்க்கச் செய்ய வேண்டும். மேலும் துஆவின் பக்கம் கவனம் செலுத்தியவாறு குறிப்பாக அல்லாஹ்விடத்தில் கருணையை வேண்ட வேண்டும். உங்களுக்காகவும் வேண்டுங்கள். உலகத்திற்காகவும் கருணையை வேண்டுங்கள்.

எனவே அல்லாஹ் நமக்கு வழங்கி வருகின்ற இந்த நாட்களிலிருந்து முழுமையான முறையில் பயனடைய வேண்டும். இந்த தொற்று நோயானது பொதுவாக குடும்பங்களில் நான் குறிப்பிட்டதுபோன்று நல்ல சூழல்களை உருவாக்கி உள்ளது. அதை மேலும் சிறப்பாக்குவதற்கு நாம் கவனம் செலுத்த வேண்டுமேயொழிய அந்நியர்களின் குடும்ப சூழல்களைப் போன்று நாம் அதனை ஆக்கிக் கொள்ளக் கூடாது.

அதாவது பொதுவாக உலகவாதிகளின் குடும்ப சூழல்களைப் பற்றி நாம் அறிகிறோம். அவர்களின் குடும்பங்களின் சண்டைகளும், குழப்பங்களும் அதிகரித்து வருகின்றன. மேலும் நிம்மதியற்ற நிலை அதிகரித்து விட்டது. அந்த நிலை நமது குடும்பங்களில் உருவாகக் கூடாது. நாம் செயல்படுத்தி வருகின்ற இந்த நன்மைகளின் காரணமாக நமது குடும்ப சூழல்கள் மேலும் சிறப்பானதாக ஆக வேண்டும். அதன் பக்கம் நமக்கு கவனமூட்டப்பட்டுள்ளது.

ஒரு மார்க்க சூழல் குடும்பங்களில் உருவாகி வருகின்றது. ஆனால் சில முறை சில ஆண்கள் அந்த சூழல் உருவாகுவதற்கு முழுமையான பங்களிப்பை வழங்குவதில்லை. மேலும் சில

## திருக்குர்ஆனிலிருந்து...

நீர் கூறுவீராக: மக்களே! நிச்சயமாக நான் உங்கள் எல்லாருக்கும் அல்லாஹ்வின் தூதராக இருக்கிறேன். வானங்கள் பூமி ஆகியவற்றின் ஆட்சி அவனுக்குரியது. அவனையன்றி வணக்கத்திற்குரியது எதுவுமில்லை. அவன் உயிரை வழங்கவும், மரணத்தை அளிக்கவும் செய்கின்றான். எனவே நீங்கள் அல்லாஹ்விடத்து நம்பிக்கை கொள்ளுங்கள். (7:159)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

சந்தர்ப்பங்களில் பெண்கள் தங்களுக்கென்று தனி விருப்பங்களை வைத்திருக்கின்றார்கள். அவர்களின் விருப்பங்கள் வேறுபட்டதாக இருக்கின்றன. தற்போதைய சூழலில் எந்த அளவுக்கு நாம் அல்லாஹ்வின் பக்கம் குனிய வேண்டும்? மேலும் அவனது திருப்தியை தேடுவதற்கு எந்த அளவுக்கு அவசியம் உள்ளது? என்பதையெல்லாம் இதுபோன்ற நபர்கள் அறிவதே இல்லை. இந்த நேரம் எப்படிப்பட்ட நேரம் என்றால் இதில் நாம் பிள்ளைகளையும் அதிகம் அதிகமாக இறைவனுக்கு அருகில் கொண்டு செல்ல முடியும்.

எனவே நமது வீடுகளை ஒவ்வொரு அஹ்மதி குடும்பமும் இந்த நாட்களில் இதன் பக்கம் சிறப்பான கவனம் செலுத்துவது அவசியமாகும். அப்போதுதான் நம்மால் அதிகம் அதிகமாக அல்லாஹ்வின் அருளை ஈர்க்க முடியும். மேலும் நல்ல முடிவும் ஏற்படும். அல்லாஹ் இறையச்சத்தின் உண்மைத்துவத்தை புரிவதற்கும் அதன்படி செயலாற்றுவதற்கும் நமக்கு நற்பாக்கியத்தை வழங்குவானாக.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தக்வாவிற்குரிய விளக்கத்தை பல்வேறு கோணங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் வழங்கியுள்ளார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இக்காலத்தின் பாதுகாப்பு கோட்டையாக இருக்கின்றார்கள். மேலும் அன்னார் வலிமை வாய்ந்த அடைக்கலம் பெறும் இடமாகவும், கோட்டையாகவும் திகழ்கின்றார்கள். அன்னார் அல்லாஹ்விடமிருந்து வழிகாட்டல் பெற்று இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை நமக்கு வெளிப்படுத்திக் கொடுத்து மிக வேதனையுடன் அல்லாஹ் மற்றும் அவனது தூதர் கூறிய வழிகளை நடக்கு எடுத்துரைத்து பாதுகாப்புக் கோட்டையில் நுழைவதற்கு நமக்கு கவனமூட்டியுள்ளார்கள்.

எனவே நம்மீது கடமை உள்ளது. ஏனென்றால் அன்னாரின் கூற்றுகளை செவிமடுத்து அதன்படி செயலாற்றுவோம் என்று உறுதிமொழி எடுத்து அன்னாரின் ஜமாஅத்தில் நாம் நுழைந்திருக்கின்றோம். எனவே அன்னாரிடம் செய்துள்ள உடன்படிக்கையை நாம் முழுமை செய்ய வேண்டும். அது நம்மீது கடமையும் ஆகும்.

நாம் அன்னாரின் வேதனைமிகு சொற்களை சீர்தூக்கிப் பார்த்து அதன்படி செயல்பட முயற்சி செய்ய வேண்டும். இதன் மூலம் எங்கு நாம் நமது உடன்படிக்கைகளை நிறைவேற்றக் கூடியவர்களாக இருப்போமோ அங்கு நாம் நமது இம்மை மற்றும் மறுமை வாழ்க்கையை சீர்செய்து கொள்பவர்களாக திகழ்வோம்.

நான் தற்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில மேற்கோள்களை எடுத்துரைப்பேன். அன்னார் அதனை பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு சபைகளில் ஜமாஅத் உறுப்பினர்களுக்கு முன்னால் எடுத்து வைத்துள்ளார்கள். நமது ஆன்மீக முன்னேற்றத்திற்காகவும், இறையச்சத்தில் நாம் முன்னேற்றம் அடைவதற்காகவும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அதனை கூறியுள்ளார்கள்.

ஒரு சபையில் தக்வா என்பது என்ன? அதனை எவ்வாறு பெற முடியும்? என்பதை விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

தக்வா என்றால் என்ன? மேலும் அதனை எவ்வாறு பெற முடியும்? என்பதை முதலில் புரிந்து கொள்வது அவசியமான காரியமாகும். தக்வா என்பது என்னவென்றால், நுட்பத்திலும் நுட்பமான அசுத்தத்திலிருந்தும் தப்பிப்பதாகும். மேலும் அதனை பெறுவதற்குரிய வழி என்னவென்றால், மனிதன் அதேபோன்று பாவத்திற்கு அருகில் கூட செல்லாமல் இருக்கின்ற வகையில் முழுமையான திட்டத்தை தீட்ட வேண்டும். வெறும் திட்டம் மட்டுமே போதுமானதாக கருதக் கூடாது.

மேலும் துஆவிற்குரிய உரிமைகளை செய்தவாறு உள்ளத்தில் உருக்கத்தை உடையவராக திகழ்ந்து அமர்ந்து கொண்டும், சஜ்தாவிலும், ருகூவிலும், நிற்றலிலும், தஹஜ்ஜுத்திலும் உருக்கமான துஆக்களை செய்யக் கூடியவராக இருக்க வேண்டும். மேலும் துஆவிற்குரிய உரிமைகளை வழங்க வேண்டும்.

சுருக்கமாக எல்லா நிலையிலும், எல்லா நேரமும் அல்லாஹ் தன்னை பாவத்திலிருந்தும் அசுத்தம் எனும் குற்றங்களிலிருந்தும் இரட்சிப்பு வழங்க வேண்டும் என்ற கவலையில் துஆவில் ஈடுபட்டு வர வேண்டும். மனிதன் பாவத்திலிருந்தும், குற்றங்களிலிருந்தும் விலகி தூய்மையாளராக ஆகிவிடுவதை விட பெரிய எந்த அருட்கொடையும் இல்லை. மேலும் இறைவனுடைய பார்வையில் நேர்மையாளராகவும், உண்மையாளராகவும் ஆகிவிட வேண்டும். இது மாபெரும் அருட்கொடையாகும். ஆனால் இந்த அருட்கொடை என்பது வெறும் திட்டங்கள் மூலமாக மட்டுமே மனிதனுக்கு கிடைக்காது. மேலும் வெறும் துஆவின் மூலமாக மட்டும் பெற்றுக் கொள்ள முடியாது. முயற்சி மட்டுமே போதுமானதல்ல.

அதேபோன்று துஆ மட்டுமே போதுமானதல்ல. மாறாக, இந்த துஆ மற்றும் திட்டம் இரண்டு முழுமையான முறையில் ஒன்று சேருவதன் மூலம் மனிதனுக்கு அந்த அருட்கொடை கிடைக்கும். எதுவரை நீங்கள் இந்த இரண்டு விஷயங்களிலும் உச்சத்தை தொட்டு விட மாட்டீர்களோ அந்த விஷயத்தை நீங்கள் பெற முடியாது. எந்த நபர் வெறும் துஆ மட்டுமே செய்வாரோ திட்டங்கள் தீட்டுவதில்லையோ அந்த மனிதர் பாவம் செய்கின்றார். மேலும் இறைவனை அவர் சோதித்து பார்க்கின்றார்.

அதேபோன்று துஆ செய்யாமல் வெறும் திட்டம் மட்டுமே தீட்டுபவரும் இறைவனை அவமரியாதை செய்கின்றார். மேலும் இறைவனிடமிருந்து தன்னை விலகியவராக ஆக்கிக்கொண்டு தனது திட்டம், ஆலோசனை மற்றும் தனது வலிமையால் அந்த நன்மையை பெற விரும்புகின்றார். மனிதனின் சுய திறமையால் நன்மைகளை அடைந்து விட முடியாது.

அடுத்து அன்னார் கூறினார்கள்: ஆனால் உண்மையான நம்பிக்கையாளர் இன்னும் சொல்வதென்றால் உண்மையான முஸ்லிமிற்குரிய அடையாளம் இதுவாக இருக்க முடியாது. உண்மையான முஸ்லிம் திட்டம் மற்றும் துஆ ஆகிய இரண்டையும் பயன்படுத்துகின்றார். வெளிப்படையான காரணிகளைக் கொண்ட திட்டங்களை முழுமையாக செயல்படுத்துகின்றார். பின்னர் அந்த விவகாரத்தை அல்லாஹ்விடத்தில் ஒப்படைத்து விட்டு துஆ செய்கின்றார். இதற்கான போதனைதான் நமக்கு திருக்குர்ஆனின் முதல் அதிகாரத்தில் வழங்கப்பட்டுள்ளது.

## திருக்குர்ஆனிலிருந்து...

அவர்களுக்குக் கூறப்பட்ட அறிவுரையை அவர்கள் மறந்துவிட்டபோது, தீமையைத் தடுத்துக் கொண்டிருந்தவர்களை நாம் காப்பாற்றினோம். அநீதி இழைத்துக் கொண்டிருந்தவர்களை மிகக் கடினமான தண்டனைக்கு ஆளாக்கினோம். ஏனெனில் அவர்கள் தீய செயல்களில் ஈடுபட்டிருந்தனர். (7:166)

A.Nasir Ahmad (அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்)

திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்: இய்யாக்க நஃபுது வ இய்யாக்க நஸ்தயீன்

எந்த நபர் தனது ஆற்றலை பயன்படுத்துவதில்லையோ அவர் தனது ஆற்றலை மட்டும் பயன்படுத்தாமல் இல்லை. மாறாக, அதற்கு அவர் அவமரியாதை செய்கின்றார். இன்னும் சொல்வதென்றால் அவர் பாவம் செய்கின்றார்.

(மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 337,338 – 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

மேலும் இதனை விவரித்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறைவன் மனிதனுக்கு வழங்கிய அனைத்து ஆற்றல்களிலிருந்தும் பயன் பெற்று பின்னர் முடிவை அல்லாஹ்விடத்தில் ஒப்படைத்து விட வேண்டும். மேலும் இறைவனிடத்தில் இவ்வாறு துஆ செய்ய வேண்டும். இறைவா! நீ எங்களுக்கு வழங்கிய ஆற்றலுக்கேற்ப நாங்கள் இயன்ற வரை செயலாற்றி விட்டோம். இந்த நிலையே நாங்கள் உன்னையே வணங்குகின்றோம் என்பதன் பொருளாகும். அதன் பிறகு இய்யாக்க நஸ்தயீன் என்று கூறி இறைவனிடத்தில் உதவி தேடுகின்றார். இனி எஞ்சியுள்ள படித்தரங்களுக்காக நான் உன்னிடத்தில் உதவி தேடுகின்றேன்.

(மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 338,339 அடிக்குறிப்பு – 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

ஆனால் நாம் எப்போதும் இதனை நினைவில் கொள்ள வேண்டும். இறைவன் நமது உள்ளங்களின் நிலைகளையும் நமது ஒவ்வொரு செயலையும் நன்கு அறிந்தவனாக இருக்கின்றான்.

எனவே நமது முயற்சிகளை அதன் உச்சம் வரை சென்றடையச் செய்து எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு முயற்சி செய்து பின்னர் அவனிடத்தில் உதவி தேடக்கூடியவராக இருக்க வேண்டும். எனவே இந்த விவகாரத்திலும் தனது உள்ளத்தை நல்ல முறையில் ஆய்வு செய்வது அவசியமாகும். தக்வாவின்படி நாம் செயல்படுகின்றோமா? இல்லையா? என்பதைப் பார்ப்பது அவசியமாகும்.

அடுத்து அன்னார் கூறுகின்றார்கள்: மனிதன் சில முறை திட்டங்களிலிருந்து பயன் பெறுகின்றான் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் திட்டங்களை மட்டுமே முழுமையாக நம்புவது கடுமையான அறிவீனமாகும். எதுவரை திட்டங்களுடன் துஆ இடம் பெறாதோ அதனால் எந்த பயனும் இல்லை.

அதேபோன்று துஆவுடன் திட்டம் இல்லையென்றாலும் எந்த பயனும் கிடைக்காது. எந்த ஜன்னல்களின் வழியாக பாவம் நுழைகின்றதோ அதனை நாம் முதலில் அடைக்க வேண்டும். எந்த ஓட்டையிலிருந்து அல்லது எந்த இடத்திலிருந்து பாவம் நுழைகின்றதோ அல்லது மார்க்கத்திலிருந்து விலகுவதற்கு எந்த விஷயம் காரணமாக இருக்கின்றதோ அதிலிருந்து விலகுவது அவசியமாகும்.

எனவேதான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: அந்த ஜன்னலை முதலில் அடைக்க வேண்டும்.

பின்னர் மனதின் பரந்துபட்ட தன்மைக்காக துஆ செய்ய வேண்டும். எனவேதான் இதைப் பற்றி அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியுள்ளான்.

وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا (29:70)

திட்டங்களை செயல்படுத்தவதற்கு இதில் பெருமளவு வழிகாட்டல் வழங்கப்பட்டுள்ளது. திட்டங்களிலும் இறைவனை விட்டு விடக்கூடாது.

மற்றொரு பக்கம் அல்லாஹ் கூறுகின்றான்:

ادْعُوْنِيْٓ اَسْتَجِبْ لَكُمْ (40:61)

எனவே மனிதன் முழுமையான இறையச்சத்தை தேடக் கூடியவனாக இருந்தால் முதலில் திட்டம் தீட்ட வேண்டும். அத்துடன் துஆவும் செய்ய வேண்டும். இரண்டையும் செயல்படுத்துவதற்குரிய உரிமையை வழங்க வேண்டும். அவ்வாறு செய்தால் அதன் காரணமாக அல்லாஹ் அவர் மீது கருணை செய்வான். ஆனால் ஒன்றை செய்து விட்டு மற்றொன்றை புறக்கணித்து விட்டால் அதன் அருட்களிலிருந்து அவர் இழப்பிற்குரியவராக இருப்பார். இரண்டையும் செயலாற்ற வேண்டிய உரிமைகளை வழங்கியவாறு செயலாற்ற வேண்டும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 338,339 – 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

எனவே மனிதன் இதுபோன்ற வழிமுறைகள் மூலமாகத்தான் தக்வாவில் நிலைபெறுகின்றான். அதாவது திட்டம் மற்றும் துஆவின் மூலம் பயன் பெறுகின்றான்.

அல்லாஹ்வின் மீது அச்சம் கொள்வது என்பது ஒவ்வொரு செயல்களின் வேர் ஆகும். அதுபோன்ற முறைகளின் மூலமாகவே மனிதன் இறையச்சத்தில் நிலைபெற முடியும். அது என்ன வழிமுறை என்பதை நான் ஏற்கனவே கூறி விட்டேன். அதாவது திட்டமும், துஆவும்தான் அந்த வழிமுறையாகும். இந்த நிலைகளில்தான் தக்வா நிலைபெற முடியும். அல்லாஹ்விற்கு அஞ்சுவது எல்லா அமல்களின் வேர் ஆகும். அதிலிருந்து எவர் விலகி இருப்பாரோ அவர் தீயவர் ஆவார். தக்வாவின் மூலம் செயல்களின் அழகு உருவாகின்றது. தக்வாதான் செயல்களை சிறப்பிக்கின்றது. அதன் மூலம் அல்லாஹ்வின் நெருக்கம் கிடைக்கின்றது. மேலும் அதன் மூலமே மனிதன் அல்லாஹ்வின் நேசராக ஆக முடியும்.

எனவே அல்லாஹ் கூறுகின்றான்:

اِنْ اَوْلِيَآؤُهٗٓ اِلَّا الْمُتَّقُوْنَ (8:35)

இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு ஓரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இறை நேசத்தின் பங்கு என்பது தக்வாவை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இறைவனுக்கு அஞ்சி நடுங்கி அவன் முன்னால் விழுந்து அதனைப் பெற்றுக் கொள்வீர்கள் என்றால் நீங்கள்

### திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக உமது இறைவன் விரைவாகத் தண்டனையளிப்பவனாவான். மேலும் நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான். (7:168)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

சிறப்பான இடத்தை அடைந்து விடுவீர்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 340 அடிக்குறிப்புடன்)

அல்லாஹ்வின் நேசராக ஆக வேண்டும் என்றால் பின்னர் அந்த நிலை இறையச்சத்தின் மூலமாகவே கிடைக்கின்றது. அல்லாஹ்வின் மீதான அச்சம் உள்ளத்தில் இருக்குமென்றால் அவனுக்கு அஞ்சிக் கொண்டே மனிதன் இருப்பான் என்றால் அந்த நிலையில் மனிதன் உயர்வான இடத்தை அடைந்து விடுவான்.

அடுத்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

முழுமையான முறையில் தக்வாவின் அனைத்து படித்தரங்களை மனிதன் முழுமை செய்யும்போது அல்லாஹ்வின் நேசர்களின் வட்டத்தில் மனிதன் நுழைந்து விடுவான். தக்வா என்பது உண்மையில் ஒரு வகையான மரணமாகும். ஏனென்றால் உள்ளத்தின் அனைத்து அம்சங்களையும் மனிதன் புறக்கணிக்கின்றபோது அது மரணித்து விடும். எனவேதான் மூத்து கபல அன்தமூத்து என்று கூறப்பட்டுள்ளது. மனிதனின் மனம் என்பது எப்பொழுதும் வெளிப்படையான இன்பங்களையே விரும்பக் கூடியதாக இருக்கும். மறைவான இன்பங்களை அது அறியாததாக இருக்கும்.

அதாவது அல்லாஹ்வை பெறக்கூடிய இன்பங்கள் மற்றும் ஆன்மீக இன்பங்கள் மறைந்திருக்கக் கூடியவைகளாக இருக்கின்றன. அதனை மனிதனின் மனம் அறிவதில்லை. ஆனால் வெளிப்படையான பளபளப்பான இன்பங்களையே மனிதன் அறிகின்றான். மனித மனமும் அதையே அறிந்திருக்கின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

மனதை எச்சரிக்கை செய்வதற்காக முதலில் வெளிப்படையான இன்பங்களின் மீது ஒருவகையான மரணத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அதன் பிறகு மறைவான இன்பங்களைப் பற்றிய அறிவு மனதிற்கு ஏற்படும். அதாவது வெளிப்படையான இன்பங்களின் மீது மரணத்தை ஏற்படுத்திக் கொண்டால் பின்னர் மனிதனின் மனம் மறைந்திருக்கக்கூடிய இன்பத்தை அறிந்து கொள்ளும். பின்னர் அந்த நேரத்தில் ஒளிந்திருக்கக்கூடிய இன்பத்தை அறிந்து கொள்ள மனம் விரும்பும். அவ்வாறு விரும்ப தொடங்கி விட்டால் சொர்க்க வாழ்க்கைக்குரிய முன்னுதாரணங்கள் தொடங்கி விடும்.

பின்னர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனது ஜமாஅத்திற்கு அறிவுரை செய்தவாறு கூறுகின்றார்கள்:

எமது ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள் தமது நஃப்ஸின் மீது மரணத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்த அறிவுரை என்பது இறைநேசர்களுக்கோ அல்லது உயர்ந்த அந்தஸ்தை அடைந்த மக்களுக்கோ செய்யக் கூடியது கிடையாது. மாறாக, ஜமாஅத்தின் உறுப்பினர்களுக்கு பொதுவாக செய்யப்பட்ட அறிவுரையாகும். இந்த இடத்தை அடைவதற்கு அல்லாஹ் ஒரு சிறப்பான அந்தஸ்தை விரும்புகின்றான். எல்லா நஃப்ஸும் அந்த இடத்தை அடைவதில்லை. அன்னார் ஜமாஅத்திற்கு பொதுவாக இந்த அறிவுரையை செய்திருக்கின்றார்கள்.

எனவே நாம் நஃப்ஸின் மீது ஒரு வகையான மரணத்தை ஏற்படுத்திக் கொண்டு தக்வாவை பெறுவதற்காக முதலில் பயிற்சி செய்ய வேண்டும். அதற்கான உதாரணம், பிள்ளைகள் எழுதக் கற்றுக் கொள்வதாகும். ஆரம்பத்தில் அவர்கள் கோணலாக எழுதுகின்றார்கள். ஆனால் இறுதியில் பயிற்சி செய்து செய்து அவர்கள் மிகத் தெளிவாகவும், நேராகவும் சுயமே எழுதத் தொடங்கி விடுகின்றார்கள். இதேபோன்று நமது ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள் பயிற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் அவர்களின் உழைப்பை காணுகின்றபோது சுயமே அவர்கள் மீது கருணை காட்டி விடுவான்.

وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا என்ற வசனம் தொடர்பாக முன்னரும் கூறப்பட்டது. அதற்கு விளக்கமளித்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا என்பதில் இந்த பயிற்சிகளைப் பற்றியே கூறப்பட்டுள்ளது. மனிதன் உழைக்க வேண்டும். அல்லாஹ்விடத்தில் துஆ வேண்ட வேண்டும். அந்நிலையில் அல்லாஹ்வும் கருணை செய்வான். மேலும் அதற்குரிய கனிகளை வழங்குவான்.

தொடர்ந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த வசனத்தில் முஜாஹிதா என்பதன் பொருள் எவ்வாறு ஒரு சிறுவன் பயிற்சி செய்கின்றானோ அதேபோன்று மனிதன் ஒரு பக்கம் துஆ செய்கின்றான். மற்றொரு பக்கம் முழுமையான திட்டங்களையும் செயலாற்றுகின்றான். இறுதியில் இறைவனின் அருள் வந்து விடுகின்றது. அதன் மூலம் மனதில் எழுச்சிகளும், கோபங்களும் அடங்கி தனிந்து விடுகின்றன. அந்த நிலை எப்படிப்பட்ட நிலையாக ஆகிவிடுகின்றதென்றால், நெருப்பின் மீது தண்ணீரை வீசுகின்ற நிலையாக அமைந்து விடும். ஏராளமான மனிதர்கள் தீமையின் பக்கம் சாயும் ஆன்மா என்ற நிலையிலேயே மூழ்கி இருக்கின்றார்கள்.

பின்னர் ஜமாஅத்தின் உள்ளார்ந்த சீர்திருத்தம் தொடர்பாக அன்னார் கூறுகின்றார்கள்:

ஜமாஅத்தின் உறுப்பினர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்கின்றனர். அவர்களுக்குள் பகைமையும், மனக் கசப்புகளும் உருவாகி விடுகின்றன. சாதாரண ஒரு சண்டையின் மூலம் ஒருவர் மற்றவரின் கண்ணியத்தின் மீது தாக்குதல் தொடுக்கின்றார். மேலும் தனது சகோதரனுடன் சண்டையிடுகின்றார். இது மிகவும் விரும்பத்தாக செயலாகும். இது இருக்கக்கூடாது. மாறாக, ஒருவர் தவறை ஒப்புக் கொள்வதால் என்னவாகிவிடப்போகிறது.

அன்னார் கூறினார்கள்: சில நபர்கள் சின்னஞ்சிறு விஷயத்தில் மற்றவரை இழிவுபடுத்தாமல் பின்வாங்குவதில்லை. இதுபோன்ற விஷயங்களிலிருந்து விலகி இருப்பது கட்டாயமாகும். இறைவனின் ஒரு பெயர் சத்தார் ஆகும். அவ்வாறிருக்க இவர்கள் ஏன் தனது சகோதரர்கள் மீது கருணை காட்டுவதில்லை? மேலும் மன்னித்தலையும், குறைகளை திரையிடுதல் போன்ற பணிகளையும் மேற்கொள்வதில்லை? தனது சகோதரனின் குறைகளை திரையிட வேண்டும். அவனது கண்ணியம் மற்றும் மரியாதையின் மீது தாக்குதல் தொடுக்கக்கூடாது.

இன்றும் கூட ஜமாஅத்தில் ஏராளமான நபர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால் சின்னஞ்சிறு விஷயங்களில் தனக்கு எதிராக ஒன்றை கேட்டு விட்டால் அவர்கள் கொதித்து விடுகின்றனர். ஆனால் அதுபோன்ற அனைத்து மன எழுச்சிகளை அடக்குவது மிக அவசியமாகும். அதனை முடிவுக்கு கொண்டு வருவது மிக அவசியமாகும். மென்மையும், இயல்பில் சகிப்புத் தன்மையும் உருவாக வேண்டும். பொதுவாக பார்ப்பது என்னவென்றால், ஒரு சாதாரண விஷயத்தில் தர்க்கம் தொடங்கி விடுகின்றது. பின்னர் ஒருவர் மற்றவரை வீழ்த்துகின்ற கவலையில் இருக்கின்றனர். எவ்வாறு நாம் பிறரை இழிவுபடுத்தலாம்? என்று கவலை கொள்கின்றனர். நாம் எப்படியாவது வெற்றி பெற வேண்டும் என்று விரும்புகின்றனர்.

அதுபோன்ற சந்தர்ப்பங்களிலிருந்து மனதின் எழுச்சிகளிலிருந்து நாம் தப்பித்துக் கொள்ள வேண்டும். மேலும் குழப்பத்தை முடிவு கட்டுவதற்காக சின்னஞ்சிறு விஷயங்களிலும் வேண்டுமென்றே இழிவை சகித்துக் கொள்ள வேண்டும். மேலும் எதிரிலுள்ள தனது சகோதரரை இழிவுபடுத்த வேண்டும் என்ற முயற்சியில் ஒருபோதும் இறங்கக்கூடாது.

(மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 341,342)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

பிறரது குறைகளை பிடித்துக் கொண்டு பரப்புவது என்பது தற்பெருமையின் வேர் மற்றும் நோய் ஆகும். தனது சகோதரன் மீது வெற்றி பெற வேண்டும் என்ற சிந்தனை என்பது தற்பெருமையின் வேர் ஆகும் என்று ஏற்கனவே கூறப்பட்டது. பிறருடைய குற்றங்களைக் குறித்து பரப்புவதும் தற்பெருமையின் அடையாளமாகும்.

இதைப் பற்றி மேலும் விவரித்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

தனது சகோதரனை வெற்றி கொள்ள வேண்டும் என்ற எண்ணமும் கூட தற்பெருமையின் ஒரு வேர் ஆகும். தனது ஒரு சகோதரனின் குறையை பரப்புவதற்கு தூண்டுகின்ற ஒரு நோய் ஆகும். இதுபோன்ற காரணங்களால் நஃப்ஸ் அசுத்தமாகி விடுகிறது. இதிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும்.

சுருக்கமாக இந்த அனைத்து விவகாரங்களும் தக்வாவில் அடங்கும். உள்ளார்ந்த மற்றும் வெளிப்படையான காரியங்களில் இறையச்சத்தை மேற்கொள்ளக்கூடிய மனிதர் வானவர்களின் கூட்டங்களில் சேர்க்கப்படுகின்றார். இறையச்சமுடையவர் உலகத்தின் ஆபத்துகளிலிருந்து பாதுகாக்கப்படுகின்றார். இறைவன் அவரது குறைகளை திரையிடுகின்றான். இந்த வழிமுறைகளை மேற்கொள்ளாதவரை எந்த பயனும் இல்லை. ஏனென்றால் இறையச்சத்திற்கு பிறகு தான் இறைவனின் அருட்கள் கிடைக்கின்றன. அதுபோன்ற மக்கள் எனது பைஅத்திலிருந்து எந்த நன்மையையும் பெற முடியாது.

நினைவில் கொள்ளுங்கள். நாவளவில் பைஅத் செய்வதில் எந்தப் பயனும் இல்லை. அல்லாஹ் மனத்தூய்மையை விரும்புகின்றான். எனவே நாவளவில் பைஅத்தினால் எந்த பயனும் கிடைக்காது. பயனும் எவ்வாறு கிடைக்க முடியும்? ஓர் அநீதி உள்ளுக்குள்ளேயே இருக்கின்றபோது பின்னர் அது எவ்வாறு பயன் தரும்? அந்நியர்களிடம் காணப்படுகின்ற மன எழுச்சியும், ஆணவமும், அகந்தையும், பகட்டும், கோபமும் அவரிடமும் இருக்குமென்றால் பின்னர் அவருக்கும் அந்நியருக்கும் என்ன வித்தியாசம் இருக்க முடியும்?

இதனை மேலும் விவரித்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

எனவே நீங்கள் உங்களது உள்ளங்களில் தூய மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். மேலும் ஒழுக்கத்தின் உயர் தரமான முன்னுதாரணங்களை பெற்றுக் கொள்ளுங்கள்.

அன்னார் கூறினார்கள்: முழு கிராமத்திலும் ஒரே ஒரு நல்லவர் இருந்தால் அந்நிலையில் மக்கள் அற்புதங்களைக் கண்டு தாக்கத்திற்கு ஆளாகி விடுவார்கள். நல்ல மனிதராகவும், தூய இயல்பு படைத்தவராகவும், மக்களுக்கு நன்மை பயப்பவராகவும், தனது உணர்ச்சிகளை கட்டுப்படுத்திக் கொள்ளக் கூடியவராகவும், பணிவை மேற்கொள்ளக் கூடியவராகவும் ஒருவர் இருந்தால் அதன் மூலம் அற்புதங்களைப் போன்று மக்கள் அவரின் தாக்கத்திற்கு ஆளாகி விடுவார்கள். தப்லீக் செய்வதற்கு இதுவும் ஒரு வழிமுறையாகும். அல்லாஹ்விற்கு அஞ்சி நன்மையை மேற்கொள்ளக்கூடிய ஒரு நல்ல மனிதரிடத்தில் இறைவன் ஒரு திகிலை உருவாக்கி விடுகின்றான். இவர் இறையடியார் ஆவார் என்ற திகில் உள்ளங்களில் ஏற்படுத்தப்படுகின்றது.

அந்நிலையில் எவ்வளவுதான் ஒருவர் பகைமை கொண்டிருந்தாலும் மெதுமெதுவாக அவர்கள் அனைவரும் தாமாகவே அவரை பின்தொடர்ந்து விடுவார்கள். மேலும் அவரை எள்ளிநகையாடுவதற்கு பகரமாக அவரின் மேன்மைகளை கூறக்கூடியவராக ஆகி விடுவார்கள். எவர் இறைவன் புறமிருந்து வருகின்றாரோ அவருக்கு அல்லாஹ் தனது மகத்துவத்திலிருந்து பங்கு வழங்குகின்றான். இதுவே நற்பாக்கியத்திற்கான வழிமுறையாகும். இது நற்பாக்கியத்திற்கான வழிமுறையாகும்.

எனவே சின்னஞ்சிறு விஷயங்களில் சகோதரர்களுக்கு துன்பங்களை வழங்குவது உகந்த காரியமல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனைத்து நல்லொழுக்கங்களையும் ஒருங்கே பெற்றிருந்தார்கள். தற்போது அல்லாஹ் முழுமையான முன்மாதிரியாக அன்னாரின் நல்லொழுக்கத்தையே நிலைநாட்டியுள்ளான். இப்போதும் அதே காட்டுமிராண்டித்தனம் இருக்குமென்றால் பின்னர் மிகவும் வேதனைபடக்கூடிய மற்றும் தீய பாக்கியமாகும்.

எனவே களங்கம் சுமத்தாதீர்கள். ஏனென்றால் சில நேரம் மனிதன் பிறர் மீது களங்கம் சுமத்தி பின்னர் சுயமே அதில் அகப்பட்டுக் கொள்கின்றான். அந்த குறை அவரிடம் இல்லை என்றால் பின்னர் நீங்கள் அவர்மீது பழி சுமத்தியவராக ஆகி விடுவீர்கள். பின்னர் நீங்கள் சுயமே அதில் அகப்பட்டுக் கொள்வீர்கள். ஆனால் ஒருவேளை உண்மையிலேயே அந்தக் குறை அவரிடம் இருக்குமென்றால் நீங்கள் எவர்மீது அந்தக் குற்றத்தை சுமத்துகின்றீர்களோ அவரது விவகாரம் அல்லாஹ்விடம் உள்ளது. ஆனாலும் நீங்கள் பழி சுமத்துவதற்கு உங்களுக்கு எந்த அவசியமும் இல்லை. தீமை இருக்குமென்றால் அந்த விவகாரம் இறைவனிடம் உள்ளது. அந்த தீமை இல்லையென்றால் நீங்கள் கூறுவதால் அது உங்கள் பக்கம் திரும்பி விடும்.

பின்னர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

ஏராளமான மக்களிடமுள்ள பழக்கம் என்னவென்றால் அவர்கள் தனது சகோதரர்கள் மீது விரைவாக அசுத்தமான பழியை சுமத்தி விடுகின்றார்கள். இந்தக் காரியங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். மனித இனத்திற்கு நன்மை செய்யுங்கள். உங்களது சகோதரர்கள் மீது அனுதாபம் காட்டுங்கள். அண்டை அயலாலருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். உங்கள் மனைவியுடன் நல்ல முறையில் குடும்பம் நடத்துங்கள். எல்லாவற்றையும் விட ஷிர்க்கிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் அதுவே இறையச்சத்தின் முதல் படியாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 344–340 அடிக்குறிப்புடன் – 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

பின்னர் அன்னார் கூறுகின்றார்கள்: இறையச்சம் என்பதன் பொருள் என்னவென்றால், தீமையின் நுட்பமான வழிகளிலிருந்தும் விலகிக் கொள்ளுங்கள். ஆனால் நினைவில் கொள்ளுங்கள். நன்மை என்பது இவ்வாறு கூறுவது மட்டுமே நன்மையாகி விடாது. அதாவது நான் நல்லவன் ஆவேன். ஏனென்றால் நான் யாருடைய செல்வத்தையும் அபகரிக்கவில்லை; கொள்ளையடிக்கவில்லை;

திருடவில்லை; தீய பார்வை பார்க்கவில்லை; விபச்சாரம் செய்யவில்லை. இதுபோன்ற விஷயங்கள் நன்மையாகி விடாது. மேலும் இதுபோன்ற நன்மைகள் இறைஞானம் பெற்றவர்களின் பார்வையில் நகைப்பிற்குரியதாகும். ஏனென்றால் அவர் அந்த தீமைகளை செய்தால், திருடினால் மற்றும் கொள்ளையடித்தால் அவருக்கு தண்டனை கிடைக்கும்.

எனவே இறைஞானமுள்ளவர்களின் பார்வையில் இதுவென்றும் மதிக்கத்தக்க நன்மையல்ல. மாறாக, அசல் மற்றும் உண்மையான நன்மை என்னவென்றால், மனித இனத்திற்கு தொண்டாற்றுவதாகும். மேலும் அல்லாஹ்வின் வழியில் முழுமையான உண்மையையும், நன்றியுணர்வையும் வெளிப்படுத்துவதாகும். மேலும் அவனது வழியில் உயிரையும் கொடுக்க ஆயத்தமாகி விடுவதாகும்.

எனவேதான் அல்லாஹ் கூறினான்:

إِنَّ اللّٰهَ مَعَ الَّذِيْنَ اتَّقَوْا وَّالَّذِيْنَ هُمْ مُّحْسِنُوْنَ

அதாவது எவர்கள் தீமைகளிலிருந்து விலகுவதுடன் நன்மைகளையும் மேற்கொள்கின்றார்களோ அவர்களுடன் அல்லாஹ் இருக்கின்றான். (16:129)

எனவே நினைவில் கொள்ளுங்கள். தீமைகளிலிருந்து மட்டும் விலகியிருப்பது மட்டும் சிறப்பிற்குரிய காரியமல்ல. அத்துடன் அவன் நன்மையையும் மேற்கொள்ளக் கூடியவராக இருக்க வேண்டும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 241,242 – 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

அடுத்து அன்னார் கூறுகின்றார்கள்: எல்லா வகையான தூய்மை மற்றும் நன்மையின் அசல் வேர் என்னவென்றால், அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்வதாகும். எந்த அளவுக்கு ஒருவருக்கு அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையில் பலவீனம் இருக்குமோ அதே அளவிற்கு அவரது நற்செயல்களில் பலவீனமும், சோம்பேறித்தனமும் காணப்படும். ஆனால் ஈமான் வலிமையானதாக இருந்தால் அல்லாஹ்வின் மீதான நம்பிக்கை உறுதியானதாக இருந்தால் அந்நிலையில் செயல்களும் நல்லதாகவே இருக்கும்.

ஈமான் வலிமையானதாகவும் அல்லாஹ்வின் மீதும் அவனது அனைத்து முழுமையான பண்புகளின் மீதும் உறுதி ஏற்பட்டு விடும் என்றால் பிறகு அதே அளவில் விநோதமான வடிவில் மனிதனின் செயல்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டு விடும். இறைவன் மீது நம்பிக்கை கொண்டவர் பாவம் செய்வதற்கு ஆற்றல் உடையவராக இருக்க மாட்டார். ஏனென்றால் இந்த நம்பிக்கையானது அவரது மன இச்சைகளின் ஆற்றல்களையும் பாவத்தின் உறுப்புகளையும் துண்டித்து விடுகின்றது.

அன்னார் கூறினார்கள்: பாருங்கள். ஒருவரின் கண்கள் தோண்டி வீசப்பட்டால் அந்நிலையில் அந்த கண்களைக் கொண்டு அவர் எவ்வாறு தீய பார்வையை பார்ப்பார்? கண்களினால் செய்யப்படுகின்ற பாவங்களை அவர் எவ்வாறு செய்வார்? அதேபோன்று ஒருவரின் கரம் துண்டிக்கப்பட்டு விட்டால் அந்த உறுப்புடன் தொடர்புடைய பாவங்களை அவர் எவ்வாறு செய்வார்?

முற்றிலும் இதேபோன்றே அன்னார் கூறுகின்றார்கள்: ஒரு மனிதர் சாந்தியடைந்த ஆன்மாவின் நிலையில் வந்து விடுகின்றபோது அந்த சாந்தியடைந்த ஆன்மாவானது அவரை குருடராக்கி விடுகின்றது. அவரது கண்களில் பாவத்திற்கான ஆற்றலே இருப்பதில்லை. அவர் பார்க்கின்றார். ஆனால் பார்ப்பதில்லை. கண்களின் பாவம் அவரிடமிருந்து வெளிப்படுவதில்லை. அவர் பார்ப்பார். ஆனால் தீய பார்வையுடன் எதனையும் பார்க்க மாட்டார். பாவத்தின் கண் கொண்டு எதனையும் பார்க்க மாட்டார்.

ஏனெனில் கண்களின் பாவப் பார்வை அவரிடமிருந்து முற்றிலும் அகன்று விடுகின்றது. அவர் செவி உடையவராக இருப்பார். அவர் செவிடராக இருப்பார். அவர் கேட்பார். ஆனால் தீய விஷயங்களை கேட்க மாட்டார். அதாவது பாவத்திற்குரிய காரியங்களை அவர் கேட்க மாட்டார். இதேபோன்று அவரது அனைத்து மன இச்சைகளும் ஆபாச சிந்தனைகளும் உள்ளார்ந்த உறுப்புகளும் துண்டிக்கப்பட்டு விடுகின்றன.

பாவம் செய்யக்கூடிய அனைத்து ஆற்றல்களின் மீதும் ஒருவகையான மரணம் வழங்கப்படுகின்றது. அவர் முற்றிலும் ஒரு மரணித்தவரைப் போன்று இருப்பார். அவர் இறைவனின் விருப்பத்திற்கு ஏற்புடையவராகவே இருப்பார். அவர் அதுவன்றி ஓர் அடி கூட எடுத்து வைக்க மாட்டார். இறைவன் மீது உண்மையான நம்பிக்கை ஒரு மனிதனுக்கு இருக்கும்போது மனிதனிடம் இந்த நிலை உருவாகும். அதன் விளைவாக முழுமையான மன அமைதி அவருக்கு வழங்கப்படுகின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த அந்தஸ்தை அடைவதையே மனிதன் தனது அசல் நோக்கமாக கொள்ள வேண்டும்.

இதுவே மனிதனின் அசல் நோக்கமாக இருக்க வேண்டும் என்று கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜமாஅத்திற்கு இவ்வாறு அறிவுரை கூறினார்கள்:

முழுமையான மன அமைதியைப் பெறுவதற்காக முழுமையான ஈமான் அவசியமாகும். எனவே அல்லாஹ்வின் மீது உண்மையான நம்பிக்கையைப் பெற்றுக் கொள்வது எனது ஜமாஅத்தின் மீதான முதல் கடமையாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 244,245)

அன்னார் கூறுகின்றார்கள்: இறைவன் ஒருவரை தூயவராக ஆக்காதவரை எவரும் தூயவராக ஆகிவிட முடியாது. இறைவனின் சந்நிதானத்தில் உருக்கத்துடனும், பணிவுடனும் மனிதனின் ஆன்மா சிரம் பணியும் என்றால் இறைவன் அத்தகையவரின் துஆவை ஒப்புக் கொள்வான். பின்னர் அவர் இறையச்சமுடையவராக ஆகி விடுவார். அந்நிலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மார்க்கத்தை புரிவதற்கு அவர் தகுதியுடையவராக ஆகி விடுவார். அதுவன்றி அவர் எதனை மார்க்கம் மார்க்கம் என்று கூறிக் கொண்டு இறைவணக்கம் எல்லாம் செய்வாரோ அவை வெறும் சடங்கு சம்பிரதாயமாக அமையும்.

மேலும் தனது முன்னோர்களை பின்பற்றி அல்லது செவியுற்ற விஷயங்களை மேலோட்டமாக செயல்படுத்தக் கூடியவராக அவர் இருப்பார். எனது மூதாதையர்கள் செய்து வந்தனர். எனவே நானும் செய்கின்றேன் என்ற எண்ணம் கொண்டவராக அவர் இருப்பார். எந்த உண்மைத்துவமும் ஆன்மீகமும் அத்தகைய நபரிடம் இருக்காது.

## திருக்குர்ஆனிலிருந்து...

வேதத்தை உறுதியாகப் பற்றிக் கொண்டு தொழுகையினையும் நிறைவேற்றித் தங்களைச் சீர்திருத்திக் கொள்பவர்களின் நற்பலனை நாம் வீணாக்க மாட்டோம். (7:171)

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

(மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 228 – 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

எனவே இதுவே இறையச்சத்தின் தரமாகும். மேலும் மார்க்கத்தை அறிவதற்கும் புரிவதற்கும் அமல் செய்வதற்கும் உரிய அளவுகோல் இதுவாகும். இந்த தரத்தை நாம் பெறுவதன் பக்கம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு கவனமூட்டியுள்ளார்கள். அதனை பெறுவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். நாம் நமது செயல்களுடன் அல்லாஹ்வின் சந்நிதானத்தில் பணிவுடன் குனிந்து உதவி தேட வேண்டும். இந்த தரங்களை நாம் அடைவதற்கு அல்லாஹ் அருள் செய்யவும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் எதிர்பார்ப்புகளை முழுமை செய்யவும் நமக்கு நற்பாக்கியம் கிடைக்க இறைவனிடத்தில் உதவி தேட வேண்டும்.

அடுத்த வசனத்தில் கூறப்பட்டுள்ள நோன்பின் விளக்கங்களும் இறையச்சத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். அதனை சரியான முறையில் பயன்படுத்தும் பாக்கியத்தினை அல்லாஹ் வழங்குவானாக. இதனை ஒவ்வொரு மனிதனையும் அவனது நிலையில் அல்லாஹ் விட்டுள்ளான். நிபந்தனை என்னவென்றால், இறையச்சத்தை மேற்கொள்ள வேண்டும்.

நோன்பு வைப்பதற்கு ஆற்றல் இல்லையென்றால் அதாவது நோன்பை சகிப்பது கடினமான நோயாக இருக்குமென்றால் மேலும் எந்த நோய்களின் நிலையில் நோன்பு நோற்க வேண்டாம் என்ற நிலைக்கு மனிதன் ஆளாகி இருந்தால் பின்னர் ஃபித்யா வழங்க வேண்டும். ஆனால் போலியான காரணங்களைத் தேடி ஃபித்யா கொடுப்பதை ஒரு கேடயமாக ஆக்கிக் கொள்ளக் கூடாது. நல்ல பணிகளை செய்து கட்டுப்படுவது அவசியமாகும். அல்லாஹ் எவ்வாறு இந்த பணியை செய்ய கட்டளையிட்டுள்ளான் என்று பார்க்க வேண்டும். எனவே ஆழமாக தக்வாவில் வழிகளில் நடந்து தன்னைத்தானே ஒருவர் ஆய்வு செய்தால் பின்னர் நோன்பு நோற்பது சிறந்ததாகும் என்பதை கண்டு கொள்வார். நோன்பு நோற்பது சிறந்ததா? அல்லது தற்காலிகமாக ஃபித்யா கொடுப்பது சிறந்ததா? என்பதை அறிந்து கொள்வார்.

மேலும் விளக்கியவாறு அல்லாஹ் கூறுகின்றான்: நோன்பாளியாகவோ, பயணியாகவோ நீங்கள் இருந்தால் நோன்பு நோற்க வேண்டாம். ஏனென்றால் அல்லாஹ் உங்களுக்கு கடினத்தை விரும்பவில்லை. மேலும் நோய் அகன்றுவிடும்போது பின்னர் விடுபட்ட நோன்புகளை முழுமை செய்ய வேண்டும். பயணத்தின்போது விடுபட்ட நோன்புகளை முழுமை செய்ய வேண்டும். ஃபித்யாவையும் வழங்கி விட வேண்டும்.

எனவே சுற்றி வளைத்து விஷயம் எங்கு வந்து நிற்கின்றது என்றால், மனிதன் தக்வாவின்படி நடந்து அல்லாஹ்வின் அச்சத்தை உள்ளத்தில் சுமந்து இறைவன் நமது நிலைகளை நன்கு அறிகின்றான் என்பதையெல்லாம் கருத்தில் கொண்டு முடிவெடுக்க வேண்டும். அல்லாஹ் உங்களுக்கான சிறந்த சூழலையும் விளைவையும் உருவாக்குவான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

எவரது உள்ளம் இதனால் மகிழ்ச்சியடைந்து விடுமோ அதாவது ரமலான் வர வேண்டும். ரமலான் வந்தால் நான் நோன்பு நோற்பேன் என்று காத்திருந்து ரமலான் வந்த பிறகு அவர் நோய்ப்பட்டதன் காரணமாக நோன்பு நோற்கவில்லை என்றால் விண்ணில் அவர் நோன்பிலிருந்து விலக்கிற்குரியவராக ஆக மாட்டார்.

அன்னார் கூறினார்கள்: இந்த உலகில் ஏராளமான மக்கள் போலியான காரணங்கள் உருவாக்கிக் கொள்கின்றார்கள். மேலும் நாம் எவ்வாறு உலகவாதிகளை ஏமாற்றி விடுகின்றோமோ அதேபோன்று இறைவனையும் ஏமாற்றி விடலாம் என்று எண்ணுகின்றார்கள். நாம் உலகவாதிகளை ஏமாற்றி விட்டோம். எனவே அல்லாஹ்வையும் ஏமாற்றி விடலாம் என்று கருதுகின்றார்கள். போலியான காரணங்களை தேடுபவர்கள் தாங்கள் காரண காரியங்களை உருவாக்கிக் கொண்டு அவர்கள் இறை கட்டளையிலிருந்து தங்களை விலக்கிக் கொள்கின்றார்கள். ஆனால் இறைவனின் பார்வையில் இது சரியல்ல.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: மனிதன் இதுபோன்ற போலியான காரணங்களை உருவாக்கிக் கொள்ள அவன் விரும்பினால் வாழ்நாள் முழுவதும் அமர்ந்து கொண்டே தொழலாம். மேலும் ரமலானின் நோன்புகளிலிருந்து முற்றிலும் விலகியும் இருக்கலாம். ஆனால் இறைவன் அவரது நிய்யத்தையும், எண்ணத்தையும் நன்கு அறிந்தவனாக இருக்கின்றான். அல்லாஹ் மறைவானவற்றை நன்கு அறிந்தவனாக இருக்கின்றான். பாதாளம் வரை அவனது பார்வை சென்றடைகின்றது. அவன் நமது எண்ணங்களையும் நன்கு அறிகின்றான். நமது நிய்யத்துகளையும் நன்கு அறிகின்றான்.

எவர் உண்மையையும், கலப்பற்றத்தன்மையையும் கொண்டவராக இருக்கின்றானோ அவருடன் இறைவன் நல்ல முறையில் நடந்து கொள்கின்றான். எவர் போலியான காரணங்களை உருவாக்கிக் கொள்கின்றாரோ அதற்கேற்பவே அல்லாஹ் அவருடன் நடந்து கொள்கின்றான். ஏனென்றால் அல்லாஹ் அதை நன்கு அறிகின்றான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உண்மையுடன் கலப்பற்றத்தன்மையும் கொண்ட நபரை அல்லாஹ் நன்கறிகின்றான். ஏனென்றால் அத்தகைய நபரிடம் வேதனை இருக்கும். ஆனால் போலியான காரணங்களை உருவாக்கிக் கொள்பவரிடத்தில் வேதனை இருக்காது. இறைவன் வேதனையுடைய உள்ளம் கொண்டவருக்கு அதிக நற்கூலியையும் வழங்குகின்றான். ஏனென்றால் வேதனையுடைய உள்ளம் மதிக்கத்தக்க ஒன்றாகும். ஆனால் போலியான காரணங்களை உருவாக்குகின்ற மனிதன் விளக்கங்களை சார்ந்து நிற்கின்றான். இறைவனுடைய பார்வையில் அதற்கு எந்த மதிப்பும் இல்லை.

(மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 259,260)

எனவே இந்த அடிப்படையான விதியை நம்மில் ஒவ்வொருவரும் கருத்தில் கொள்ள வேண்டும். எனவே அல்லாஹ் தெளிவாக கூறி விட்டான். பயணி மற்றும் நோயாளியின் மீது எந்தக் கட்டாயமும் இல்லை. அவர் பின் நாட்களில் அந்த நோன்பை நோற்றுக் கொள்ளட்டும். ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)

## திருக்குர்ஆனிலிருந்து...

நாம் அவர்களை பூமியில் பல்வேறு சமுதாயங்களாகப் பிரித்தோம். அவர்களுள் சிலர் நல்லவர்களாகவும் மற்றுஞ்சிலர் தீயவர்களாகவும் இருக்கின்றனர். மேலும் அவர்கள் (நன்மையின் பக்கம்) திரும்பும் பொருட்டு நாம் அவர்களை நல்லவற்றாலும் தீயவற்றாலும் சோதித்தோம். (7:169)

A.Basheer Ahmad, Melapalayam

அவர்கள் அந்த நிலையில் அத்தகைய மனிதர்கள் ஃபித்யா கொடுப்பது அவசியமாகும் என்று கூறியுள்ளார்கள். இதன் மூலம் நோன்பு நோற்பதற்காக நற்பாக்கியமும் கிடைத்து விடும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 258)

இன்றைய நாட்களில் வைரஸ் நோயின் காரணமாக மக்கள் கேள்வி கேட்கின்றனர். தொண்டை வரண்டு விடும். அதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளது. எனவே நாங்கள் நோன்பு வைக்க வேண்டுமா? வேண்டாமா? என்று கேட்கின்றனர். நான் பொதுவாக எந்தத் தீர்ப்பும் வழங்குவதில்லை. நான் இது தொடர்பாக அவர்களுக்கு பொதுவாக இவ்வாறு பதில் எழுதுகின்றேன். அதாவது நீங்கள் உங்களது நிலைமைகளைப் பார்த்து சுயமே முடிவெடுத்துக் கொள்ளுங்கள். தூய உள்ளம் படைத்தவராகவும், இறையச்சத்தின் வழிகளில் நின்று கொண்டும் உங்களது உள்ளத்திடமே நீங்கள் மார்க்கத் தீர்ப்பு கேளுங்கள்.

திருக்குர்ஆனின் தெளிவான வழிகாட்டல் என்னவென்றால், நோயாளியாக இருந்தால் நோன்பு நோற்கக் கூடாது. நோயாளியாக ஆகி விடுவோம் என்ற சாத்தியக்கூறின் அடிப்படையில் நோன்பை விடுவது தவறாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் கூறுகின்றார்கள். அந்த நிலையை செயல்படுத்தத் தொடங்கினால் ஒரு போலியான காரணத்திலிருந்து இன்னொரு போலியான காரணத்தை மனிதன் தேடத் தொடங்கி விடுவான். நோன்பு நோற்றால் தொண்டை வரண்டுவிடும் என்று மருத்துவர் கூறியிருப்பதாக ஒருவர் கூறினால் நான் அவரிடம் கூறுவேன்.

நான் பலதரப்பட்ட மருத்துவ வல்லுநர்களிடம் கருத்து கேட்டேன். மருத்துவர்கள் வழங்கியுள்ள கருத்துக்களில் அவர்களுக்கிடையே கருத்து வேறுபாடு உள்ளது. சில வல்லுனர்கள் தெளிவாக எனக்கு எழுதியுள்ளார்கள். நோன்பு வைத்தால் நோய் கண்டிப்பாக வரும் என்ற எந்த உறுதியும் கிடையாது.ஆயினும் அறிகுறிகள் வெளிப்படும் என்றால் உதாரணமாக இருமல் அல்லது லேசான காய்ச்சல் இருக்குமென்றால் நோன்பை விட்டு விட வேண்டும். அல்லது வேறு ஏதாவதொரு அறிகுறி அவர்களுக்கு தென்பட்டால் நோன்பை விட்டு விட வேண்டும். ஒருவேளை அந்நிலையில் நோன்பு வைத்திருந்தால் அதனை முறித்துக் கொள்ள வேண்டும்.

சில மருத்துவர்கள் நோன்பு நோற்கக் கூடாது என்ற கருத்தை உடையவர்களாகவும் அல்லது சில நிபந்தனைகளை வகுத்து தங்களது கருத்தை வழங்கியுள்ளார்கள். அதிலிருந்து நமக்கு தெரிய வருவது என்னவென்றால், நோன்பு வைக்காமல் இருப்பதே சிறந்ததாகும். அவர்களில் எவரும் தெளிவான கருத்தை கூறவில்லை. அவர்கள் பயமுறுத்துகின்றார்கள். மேலும் அத்துடன் உணவைக் கருத்தில் கொண்டால் பின்னர் நோன்பு வைக்கலாம் என்று கூறுகின்றனர்.

இப்போது எழுகின்ற கேள்வி என்னவென்றால், ஏழை மக்களால் இந்த சூழலில் எந்த அளவுக்கு உணவை கருத்தில் கொள்ள முடியும்? ஆக பல தரப்பட்ட கருத்துக்களைப் பார்த்த பிறகு நோன்பு வைப்பதால் எந்த தவறும் இல்லை என்ற கருத்தே ஏற்பட்டுள்ளது. ஆயினும் சிறிதளவு சந்தேகம் இருக்குமென்றால் உடனடியாக நோன்பை கைவிட்டு விடுங்கள்.

சிலரது எண்ணம் என்னவென்றால், நோயாளி இருக்கின்ற ஒரு குடும்பத்தில் நோய் இல்லாத ஆரோக்கியமான மனிதரும் நோன்பு நோற்க வேண்டாம் என்பதாகும். ஆனால் வேறு மருத்துவரிடம் ஆலோசனை பெற்ற போது அதற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்று கூறி விட்டார்கள்.

எவ்வாறிருப்பினும் நோன்பை திறக்கும்போதும், வைக்கும்போதும் தண்ணீர் பயன்படுத்துங்கள். மேலும் எவர்கள் தங்களைப் பற்றி மிகவும் அதிகமாக கவலைப்படுகின்றார்களோ அவர்கள் உடலில் நீண்ட நேரம் தண்ணீர் சத்து தங்கியிருக்கின்ற உணவை எடுத்துக் கொள்ளட்டும்.

எவ்வாறிருப்பினும் இந்த மருத்துவர்களின் கருத்துக்களில் கருத்து வேறுபாடு உள்ளது. இந்த மருத்துவர்களில் அமெரிக்காவின் மருத்துவரும் அடங்குவார். ஜெர்மனியின் மருத்துவரும் அடங்குவார். இங்குள்ள மருத்துவரும் அடங்குவார். எனவே வீணாக காரணமிற்றி நோன்பை விடுவது சரியல்ல. எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் குறிப்பிடுகின்ற சாக்குப்போக்குகளை தேடுபவர்களின் வட்டத்தில் நாம் வந்துவிடக்கூடாது என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். ஆயினும் தற்காப்பு அவசியமாகும்.

சிலரைப் பொறுத்தவரை தண்ணீரின் தேவை மிக குறைவாகவே உள்ளது. அவர்கள் பொதுவாக தண்ணீர் அருந்துவதில்லை. அவர்கள் நோன்பும் வைக்கின்றார்கள். பொதுவான சூழல்களிலும் கூட அவர்கள் அதிகமாக தண்ணீர் அருந்துவதில்லை.

நம்முடைய பெரியவர் ஒருவர் இருந்தார். அவரது பெயர் சவுத்ரி நஸீர் சாஹிப் ஆகும். அவர் கோடை காலத்தில் பகல் முழுவதும் சுற்றிக் கொண்டு இருப்பார். நாங்கள் வீடுகளுக்கு வந்ததும் தண்ணீர் குடிக்கவே முந்திக் கொள்வோம். ஆனால் அவரோ மிகக் குறைவாகவே தண்ணீர் குடிப்பார். சில முறை குடிப்பார். சில முறை குடிக்க மாட்டார். நான் பல முறை இதுபற்றி அவரிடம் கேட்டுள்ளேன்.

அதற்கு அவர், எனக்கு தண்ணீரின் தேவை மிகக் குறைவாகவே உள்ளது என்று கூறுவார். எனவே மனித இயல்புகள் பலதரப்பட்டதாக இருக்கின்றன. தற்போதைய சூழல்களில் எந்த அளவுக்கு இயலுமே அந்த அளவுக்கு கருத்தில் கொண்டு நடக்க வேண்டும். எவ்வாறிருப்பினும் தனது சூழல்கள் மற்றும் நிலைமைகளை கருத்தில் கொண்டு ஒவ்வொருவரும் முடிவெடுத்துக் கொள்ளட்டும். தனது மனசாட்சியிடம் தீர்ப்பு பெற்றுக் கொள்ளட்டும்.

மேலும் நோன்பு நோற்பதற்கு அல்லாஹ்விடத்தில் நற்பாக்கியத்தை வேண்டியவாறு துஆ செய்யுங்கள். மேலும் இந்த நாட்களில் மிக அதிகமாக துஆ செய்யுங்கள். அல்லாஹ் மனிதர்களுக்கு அறிவை வழங்கட்டுமாக. இறைவனை அடையாளங்கண்டு கொள்ளக்கூடியவர்களாக ஆகட்டுமாக. அல்லாஹ் இந்த உலகிலிருந்து இந்த தொற்று நோயை விரைவாக ஒழிக்கட்டுமாக. உலகின் மீது அல்லாஹ் கருணை காட்டுவானாக. மேலும் அஹ்மதிகளாகிய நாமும் அல்லாஹ் மற்றும் அவனது அடியார்களுக்குரிய உரிமைகளை தக்வாவின் வழியில் நடந்து நிறைவேற்றுபவர்களாக திகழ்வோமாக. ரமலானின் பரக்கத்திலிருந்து முழுமையாக பயன் பெறக்கூடியவர்களாக திகழ்வோமாக.

## திருக்குர்ஆனிலிருந்து...

நாம் எம்முடைய அடையாளங்களை வழங்கிய ஒருவருடைய நிலையை நீர் அவர்களுக்கு எடுத்துரைப்பீராக! பின்னர் அவர் அவற்றிலிருந்து நழுவித் தனித்துவிட்டார். இதனால் ஷைத்தான் அவரைப் பின்பற்றிச் சென்றான். ஆகவே அவர் வழிதவறியவர்களைச் சேர்ந்தவராகிவிட்டார். (7:176)

M.Y. Shahul Hameed, Melapalayam

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 28 May 2020 Issue No. 22

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

இதனையும் நினைவில் கொள்ளுங்கள். அதாவது இன்றைய நாட்களில் உலகின் சூழல்கள் மாறி வருகின்றன. இந்த தொற்று நோயின் காரணமாக உலகின் பொருளாதார நிலைமைகள் மிகவும் சீர்கெட்டு விட்டன. இன்றைய நாட்களில் இருப்பதைப் போன்ற பொருளாதார சூழல்கள் வரும்போது பிறகு போருக்கான வாய்ப்புகளும் அதிகரித்து விடுகின்றன. ஏராளமான ஆய்வாளர்கள் இதுபோன்ற விஷயங்களை கூறி வருகின்றனர்.

மேலும் உலகவாதிகளின் அரசாங்கங்கள் தங்களின் நலன்களை சரி செய்து கொள்வதற்கு தீர்வாக உலகியல் திட்டங்களை காரணிகளாக ஆக்கிக் கொள்கின்றனர். தனது நாட்டு மக்களின் கவனத்தை அகற்றுவதற்காக மேலும் கஷ்டங்களில் ஆழ்த்துவதற்குரிய விஷயங்களைப் பேசுகின்றனர். அதன் காரணமாக இந்த மக்கள் மேலும் நாசத்திற்கு உள்ளாகி விடுகின்றார்கள்.

நான் கூறியதுபோன்று வல்லுநர்களும் இதுபோன்ற கருத்துக்களை கூறியுள்ளனர். எனவே அல்லாஹ் வல்லரசுகளுக்கு அறிவை வழங்குவானாக. அவர்கள் அறிவைக் கொண்டு செயல்படட்டுமாக. மேலும் உலகில் குழப்பமும் மேலும் அழிவும் வந்துவிடும் வகையில் எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்காமல் இருக்கட்டுமாக.

உலகில் இப்பொழுது மிக வெளிப்படையாக பத்திரிகைகளிலும் கூட செய்திகள் வந்து விட்டன. விமர்சகர்கள் கருத்துக்களை கூறியுள்ளனர். அமெரிக்கா ஈரானிற்கு மிரட்டல் விடுத்துள்ளது. சீனாவின் மீது குற்றம் சுமத்திக் கொண்டே செல்கின்றனர். அதாவது சீனா சரியான தகவல் தரவில்லை. எனவே சீனாவிற்கு எதிராக வழக்கு தொடர விரும்புகின்றனர். மேலும் சீனாவுடன் இவ்வாறு நடந்து கொள்ள வேண்டும். அவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று கூறுகின்றனர். மேலும் ஈரானுடன் நாங்கள் இவ்வாறு நடந்து கொள்வோம்; அவ்வாறு நடந்து கொள்வோம் என்றும் கூறுகின்றனர்.

எவ்வாறிருப்பினும் அமெரிக்க அரசாங்கம் அறிவுடன் நடக்க வேண்டும். ஏனைய அரசாங்கங்களும் அறிவுடன் செயல்பட வேண்டும். தற்போதைய சூழல்களில் தவறான எந்தவொரு நடவடிக்கையும் எடுத்து உலகை மேலும் அழிவின் பக்கம் கொண்டு செல்வதற்கு பகரமாக சரியான சிந்தனையுடன் சரியான திட்டம் வகுக்க வேண்டும். மேலும் அல்லாஹ்வின் பக்கம் திரும்பியவாறு மேலும் அல்லாஹ்விடம் குனிந்தவாறு மேலும் அல்லாஹ்விடத்தில் உதவி தேடியவாறு இந்த தொற்று நோயிலிருந்து தப்பிப்பதற்கு துஆ செய்ய வேண்டும். மேலும் முயற்சி செய்ய வேண்டும். மேலும் இந்த நோயின் சிகிச்சைக்காக விஞ்ஞானிகள் முயற்சிகள் செய்து வருகின்றனர். அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

அல்லாஹ் நமக்கு துஆக்கள் செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. மேலும் நமது நிலைமைகளை சிறந்ததாக்கிக் கொள்வதற்கான நற்பாக்கியத்தையும் வழங்குவானாக. மேலும் உலகிற்கும் உலக வல்லரசு அரசாங்கங்களுக்கும் அறிவுடன் தனது பாலிஸிகளை வகுக்கவும், எதிர்கால செயல் திட்டங்களை உருவாக்கவும் அல்லாஹ் நற்பாக்கியத்தை வழங்குவானாக. ஆமீன்.

**முக்கிய அறிவிப்பு**

**ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஸில் அஸீஸ் அவர்கள் தங்கள் கடிதங்களை பார்வையிட்டு தங்களுக்காக துஆ செய்கின்றார்கள்**

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுக்கு கடிதம் எழுதும் அனைத்து ஜமாஅத் சகோதர சகோதரிகளுக்கும் அறிவிக்கப்படுவதாவது: வழக்கம்போல் தங்களின் அனைத்துக் கடிதங்களும் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஸில் அஸீஸ் அவர்களுக்கு முன் சமர்ப்பிக்கப்படுகின்றன. எனினும் கொரோனா வைரஸ் தொடர்பாக இன்றைய நாட்களில் ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையில் கடிதங்களுக்கு பதில் எழுதும் பணிபுரிபவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. எனவே அந்த அனைத்துக் கடிதங்களுக்கும் ஒவ்வொருவருக்கும் தனித் தனியாக பதில் அனுப்புவது சாத்தியமில்லை. ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஸில் அஸீஸ் அவர்கள் தங்கள் கடிதங்களை பார்வையிட்டு தங்களுக்காக துஆ செய்கின்றார்கள்.

அல்லாஹ் கருணையும், அருளும் புரிவானாக. இந்தத் தொற்று நோய் மற்றும் ஏனைய சிரமங்கள் மற்றும் பிரச்சனைகள் மற்றும் கஷ்டங்களிலிருந்து அனைவரையும் பாதுகாப்பானாக. அனைவரையும் தனது பாதுகாப்பிலும் அடைக்கலத்திலும் வைப்பானாக. மேலும் எப்பொழுதும் அவனது அன்பின் பார்வை உங்கள் மீது இருக்கட்டுமாக.

(முனீர் அஹ்மது ஜாவீது – தனிச்செயலர்)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அவன் நமக்காக எத்தகைய ஓர் இறை தூதர் (ஸல்) அவர்களை அனுப்பியுள்ளான் என்றால் அவர் கருணைமிக்கவராவார். எல்லா விதமான நற்காரியங்களிலும் சிறப்பினை பெற்றவராக அவர் இருக்கின்றார். எல்லா வகையான சிறப்புகளிலும் எல்லா வகையிலும் முன்னேறிச் சென்றவராக அவர்கள் இருக்கின்றார்கள்.

அவர்கள் எல்லா நபிமார்கள் மற்றும் இறைதூதர்களின் முத்திரையாகத் திகழ்கின்றார்கள். நகரங்களின் தாயிடம் தோன்றிய வாக்களிக்கப்பட்ட நபி உண்மையில் முஹம்மது (ஸல்) அவர்கள் ஆவார்கள். அவரிடமிருந்து அருள்களைப் பெற்றுக் கொண்டவர்களின் நாவுகள் எப்போதும் அவர்களை புகழ்வதில் ஈரமாக இருக்கின்றன.

உம்மத்திற்காக அளவு கடந்த கஷ்டங்களைத் தாங்கி அவர்களுக்காக உழைத்ததன் காரணமாக இந்த வகையிலும் அவர் புகழுக்குரியவராக இருக்கின்றார். அவர்கள் மார்க்கத்தின் கட்டடத்தை உயர்த்தினார்கள். நமக்காக அவர்கள் ஒளிமயமான பிரகாசமான நூலைக் கொண்டு வந்ததன் காரணமாகவும் அவர் புகழுக்குரியவராக இருக்கின்றார்கள். தனது இறைவனை ரப்புல் ஆலமீனின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதில் நமக்காக அவர்கள் பலவகையான துன்பங்களுக்கு இலக்காக வேண்டியது வந்ததனாலும் அவர் புகழுக்குரியவர். இதற்கு முன்னுள்ள வேதங்களில் எவையெல்லாம் முழுமை பெறாமலும் குறையுடையனவாகவும் இருந்தனவோ அவற்றை பெருமானார் (ஸல்) அவர்கள் முழுமைப்படுத்தினார்கள்.

(அல் பலாக், ரூஹானீ கஸாயின் தொகுதி 13, பக்கம் 433–434 அரபி சொற்றொடரின் தமிழாக்கம்)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad